இதழ் 330
15 மார்ச் 2025
14 பக்கங்கள்

இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



# இலங்கையின் இனப்படுகொலையால்

# தமிழீழ மண் நனைந்துள்ளது

செல்வி **ரேணுகா இன்பக்குமார்** சட்டத்துறை இறுதியாண்டு மாணவி Western Sydney University Australia



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பழிவாங்கப்பட்ட இஸ்லாமியர்கள்!

கிண்ணியான்

# குட்டித்தேர்தலில் எந்தக்கட்சியும் வடகிழக்கில் தனித்து ஆட்சியமைக்க முடியாது..!

பா.அரியநேத்திரன்

# வன்னியில் கால்நடைகள் மேய்ச்சல்-தரை இன்மையால் அவதி

## ரவிகரன் நா.உ

வன்னியில் ஏறக்குறைய 370,000 கால்நடைகள்காணப்படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவையின்மையால், கால்நடைவளர்ப்பாளர்கள் அவதியுறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மேய்ச்சல் தரவைக்காக காணிகளை ஒதுக்கிக்கொடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் அவர் இதன்போது வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 100,000 கால்நடைகளும், மன்னார் வட்டத்தில் 140,000 கால்நடைகளம், வவுனியா மாவட்டத்தில 130,000 கால் நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 370,000 கால்நடைகள் காணப் படுகின்றன.

இவ்வாறு பெருமள

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# நரேந்திர மோடியை சந்திக்க சந்தர்ப்பம் கோரியுள்ள தமிழரசு கட்சி

மாகாண சபை முறைமையை அமுலாக்குவதை தற்போதை தேசிய மக்கள் சக்தி விரும்பவில்லை என்பது தெளிவாக புலனாகியுள்ளதாக இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், 'மாகாண நிர்வாகத்தையும் மத்திய நிர்வாகத்தையும் இணைக்கும் தளமாக மாவட்ட இணைப்புக்குழு இருந்து வருகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதற்காகவே, ஆரம்பத்தில் மாவட்ட இணைப்புக்குழுக்களின் இணைத்தலைவர்களாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

'எனினும் தற்போது அரசியல் தரப்பினரே மாவட்ட இணைப்புக்குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றனர்' என்று அவர் கூறியுள்ளார்.

'இதன்மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தளவுக்கு தங்களுக்கு ஆதரவாக உள்ளது என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

எனவே, 'உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளூர் கட்சிகளின் வசமே காணப்பட வேண்டும்' என்று அவர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# புதிய கூட்டணியாக மாற்றம் பெறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மேலும் சில தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரக் குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இறுதி தீர்மானத்தை எட்டியது

இதன்படி, பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ் தேசிய பசுமை இயக்கம், என்.ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ் தேசிய கட்சி மற்றும் கே.வி.தவராசா தலைமையிலான ஜனநாயக தமிழரசு கூட்டணி ஆகியன தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இறுதி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பான பல சுற்று பேச்சுவார்த்தைகள் கடந்த நாட்களில் இடம்பெற்றிருந்தன.

'குறித்த கட்சிகளின் கொள்கைகள் தங்களது கொள்கைகளை பாதிக்கும் வகையில் இல்லை' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கட்சிகளுக்கு இடையே உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடாத போதிலும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் புதிய கூட்டணி அமைய பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ஆயுத உற்பத்திக்கு மாறும் ஜேர்மனின் பிரபல கார் நிறுவனம்

மோட்டார் வாகன உற்பத்தியில் 1937ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் உலகில் முன்னணி நிறுவனமான வொக்ஸ்வெகன் கார் உற்பத்தி நிறுவனம், தற்போது பெரும்வீழ்ச்சியை கண்டு வரும் நிலையில் அது ஆயுத உற்பத் தியை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கான ஆயுத விநியோகத்தை அமெரிக்கா நிறுத்தியதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் தனது பாதுகாப்பு செலவீனத்தை 870 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து வொக்ஸ்வெகன் கார் உற்பத்தி நிறுவனத்தின் தலைவர்களுடன்




இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அதன் பிரதம பணிப்பாளர் ஒலிவர் புளூமி தாம் ஆயுத உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாக கடந்த செவ்வாய்க் கிழமை(11) தெரிவித்துள்ளார்.

வொக்ஸ்வெகன் நிறுவனம் கடந்த வருடம் மோட்டார் வாகன விற்பனையில் பெரும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# அமெரிக்கா இந்த வருடம் பொருளாதார சரிவைச் சந்திக்கும் – ஜேபி மோகன்



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் பொருளாதாரக் கொள்கைகள் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியை பாதிப்பதுடன், அமெரிக்கா இந்த வருடம் பொருளாதார வீழச்சியை சந்திக்கும் ஆபத்திலும் உள்ளதாக அமெரிக்காவின் முன்னணி முதலீட்டு வங்கியான ஜே.பி.மோர் கன் வங்கி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் பெருமளவில் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு அமெரிக்கா அதிக வரியை நிர்ணயித்துள்ளது அதன் பொருளாதாரத்தை பாதிக்கலாம். இந்த வருடம் அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி என்பது 40 விகிதங்கள் சாத்தியமானதாக உள்ளது. அடுத்த மாதம் வரிகள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இந்தியா மீதான வரி விதிப்பு

## அமெரிக்க துணை அதிபர் வருகின்றார்

இந்தியா மீதான வரிவிதிப்பை அமெரிக்கா மேற்கொள்ள திட்டமிட்டுள்ள நிலையில் அது தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி வான்ஸ் இந்த மாதம் இந்தியா வரவுள்ளதாக பொலிற்றிக்கோ என்ற ஊடகம் கடந்த புதன்கிழமை(12) தெரிவித்துள்ளது.

அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா அதிக வரிகளை விதிப்பதால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு



அதிக வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் எச்சரித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இந்தியா அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# அமைதிப் பேச்சுக்கு தயாராகும் மத்திய ஆபிரிக்க நாடும் – ஆயுதக் குழுவும்



கடந்த ஜனவரி மாதம் முதல் இடம்பெற்ற மோதல்களில் ஆயிரம் பேர் கொல்லப்பட்டும், பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தும் இருந்த நிலையில், கொங்கோ ஜனநாயக குடியரசுக்கும் எம்-23 என்ற ஆயுதக் குழுவினருக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 18 |ஆம் நாள்ஆரம்பமாகவுள்ளதாகஅங்கோலாவின் அரச தலைவர் கடந்த புதன்கிழமை(12) தெரிவித்துள்ளார்.

அங்கோலாவின் தலைநகர் லவன்டாவில் இந்த பேச்சுக்கள் ஆரம்பமாகும் என கொங்கோவின் அரச தலைவர் பெலிஸ் சிசெகெடியின் அங்கோலா பயணத்தின் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# சம்பூரில் “திசைகாட்டி” குத்துக்கரணம்.

ஆரம்பத்தில் இருந்து சம்பூர் அனல் மின்னிலையத்தை எதிர்த்துவந்த ஜே வி பியினர் ஆட்சியில் உள்ளதால் அரசியல் குத்துக்கலணம் அடித்துள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்பொதுவேட்பாளராக கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு இலங்கையில் ஐந்தாம் நிலையை பெற்றவரும் இலங்கை தமிழ் அரசுக்கட்சி மத்திய குழு உறுப்பினரும்,தமிழ்தேசியவாதியுமான பா.அரியநேத்திரன் குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்து கருத்துக்கூறுகையில், அடுத்த மாதம் ஏப்ரல் 4,ல், இலங்கைக்கு வருகை தரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சம்பூரில் ஆரம்பிக்கப் படவுள்ள சூரிய மின்சக்தி திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கடந்த 2024, டிசம்பர்,15, ல்,இந்தியாவில் சென்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைக்கு வருமாறு அழைத்ததன் பேரில் இந்தியத் தலைவர் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி இரண்டு நாள் பயணமாக இலங்கை வந்து திருகோணமலை சம்பூர் அனல் மின்நிலையத் திட்டத்திற்கான அடிக்கல்லை நடவுள்ளார்.

இலங்கை, இந்திய மின் கட்டமைப்புகள் இணைப்பு உட்பட எரிசக்தி இணைப்பு என பல் வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்கள் கலந்துரையாடியிருந்தனர். அதன் ஆரம்பகட்ட மாக சம்பூர் திட்டம் அமையவுள்ளது அமையவுள்ளது.

எதிர்த்தவர்களே அழைத்து அனல் மின்னிலையத்தை ஆரம்பிக்கப்போகிறார்கள். இந்த திட்டத்திற்கான ஆரம்பம் 2002ஆம் ஆண்டு முதல் சம்பூர் சூரிய மின்சக்தி திட்டம் தொடர்பான பேச்சுகள் இலங்கை, இந்தியா இருநாடுகளுக்கும் இடையில் நடைபெற்றுவந்ததன் பின்புலத்திலேயே தற்போது அத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த திட்டம் தொடர்பாக ஆரம்பத்தில் இருந்து கடந்த 2023, வரை தொடர்ச்சியாக எதிர்த்துவந்த ஜே வி பி கட்சி தற்போதய தேசியமக்கள் சக்தி கடந்த 2024, ஜனாதிபதி தேர்தலில் அநுரா ஜனாதிபதியாகி 159, ஆசனங்களுடன் ஆட்சியமைத்தபின்னர் அவர்களின் நிலைப்பாடு முற்றாக மாறி குத்துக்கரணம் அடிக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.

தாமே அன்று எதிர்து தாமே இன்று ஆதரித்து இந்தியப்பிரதமர் மோடியை கொண்டு சம்பூர் அனல் மின்சாரத்திட்டத்தை முன்எடுக்கப்போவதானது இவர்களின் இரட்டை வேடத்தை கொடிட்டு காட்டுகிறது.

தாங்கள் ஆட்சியில் இல்லை எனில் எதிர்பதும், ஆட்சியில் இருந்தால் எந்த கெடுதல் திட்டம் என்றாலும் ஆதரிப்பது என்பது இலங்கை அரசியலில் ஆட்சியமைத்த அனைத்து கட்சிகளின் நிலைமையே தேசிய மக்கள் சக்தி அரசும் செய்கிறது.

ஐக்கியதேசியகட்சி, ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி, பொதுசன பெரமுனை , ஐக்கியமக்கள் சுதந்திர கட்சி எல்லா கட்சிகளைப்போலே சிவப்பு சாயம் பூசிய தேசிமக்கள் சக்தியும் செயல்படுகிறது என்பதற்கு இது நல்ல உதாரணம்.

சம்பூர் அனல் மின்நிலையம் அமைப்பது தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியிலோ, தமிழ்த்தேசிய கட்சிகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## ஈழத்தமிழரின் இறைமையையும் ஈழத்தமிழர் நாகரீகத்தையும் இல்லாதொழிக்கும் பண்பாட்டு இனஅழிப்பு நோக்குடைய உள்ளூராட்சித் தேர்தல்

அனைவருக்கும் மார்ச் 20ம் நாளில் ஐக்கிய நாடுகள் சபையினால் கொண்டாடப்படும் அனைத்துலக மகிழ்ச்சி நாள் வாழ்த்து. எல்லோரையும் உள்ளடக்கிய சமத்துவமுள்ள பொருளாதார வளர்ச்சிகளைப் பேணுவதன் வழி எல்லோருக்குமான மகிழ்ச்சியான வாழ்வு என்னும் மனித இலக்கை அனைவரும் அடைய உழைக்க வேண்டும் என்பதே இந்நாளின் நோக்கு. ஈழத்தமிழர்களும் தாங்கள் வாழும் இடங்களில் மகிழ்ச்சிக்குத் தடையாக உள்ளனவற்றை இனங்கண்டு அதனை மாற்றியமைக்கக் கூடிய வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோருவது போல இந்த விருப்புடையவர்களாக உள்ளவர்களின் கூட்டு (coalition of the willing) ஒன்றை உள்ளூராட்சித் தேர்தலால் ஆட்சி பெறச் செய்து ஈழத்தமிழர்களின் மகிழ்ச்சி வாழ்வுக்கு உதவ வேண்டும் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. பிரித்தானியாவே இந்த விருப்படையவர்களின் கூட்டு என்னும் நெப்போலியன் கால உத்தியினை மீளவும் முன்னெடுத்தே தான் ஐரோப்பிய ஒன்றியத்தில் மீளவும் இணைய முடியாத நிலையில் பிரான்சின் தலைமையில் உருவாக்கப்பட்டு வரும் ஐரோப்பிய இராணுவத்தில் உக்ரேனில் தன்னை நிலைப்படுத்த முயல்கிறது. தகைய இன்றைய சூழலில் உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் தனித்துவங்களைப் பேணிய நிலையில் விருப்புடையவர்களாக உள்ளவர்களின் கூட்டு ( coalition of the willing) சைக்கிள் சின்னத்தில் இணைவதால் உருவாக்கப் பட வேண்டும். இதுவே இன்றைய உலகில் ஈழத்தமிழருக்கான அரசியல் உரையாடல்களுக்கான தளத்தைத் தோற்றுவிக்கும் என்பது இலக்கின் கருத்தாக உள்ளது. மேலும் இன்று மாரச் 15ம் நாள் அனைத்துலக இஸ்லாமியர்கள் மேலான வெறுப்புக்கு எதிரான நாளாக (International Day to Combat Islamophobia) ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படுகிறது. அதாவது இஸ்லாமியர்கள் என்ற அடிப்படையில் காட்டப்படும் வெறுப்பு அரசியல் ஆக்கிரமிப்பு முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என்பதே இந்நாளின் நோக்கு. இந்நாளில் ஐ.நா.வுடன் இணைந்து இஸ்லாமியர் மேலான வெறுப்பு அரசியல் நீக்கம்பெற வேண்டுமென்று இலக்கும் வலியுறுத்துகிறது. அதே நேரம் ஈழத்தமிழர்கள் மேலான வெறுப்பு அரசியலும் உலகெங்கும் பாரத் சிறிலங்கா கூட்டாண்மையால் 1990கள் முதல் பரப்பப்பட்டு மேற்குலக ஆசியுடன் பயங்கரவாதிகள் - பிரிவினைவாதிகள் என்று ஈழத்தமிழர்களைச் சித்தரிக்கிற நிலை 35 ஆண்டுகளாகத் தொடர்கிறது. இது உலகநாடுகள் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கத் தடையாக உளள்து. இதுவே ரணில் விக்கிரமசிங்கா பலஸ்தீனியர்களை நாடுகள் தன்னாட்சி உள்ளவர்களாக அங்கீகரிப்பதால் சிறிலங்காவும் அதனை ஏற்கிறது ஆனால் ஈழத்தமிழர்களை ஒரு நாடும் 1983 முதல் இன்று வரை தன்னாட்சி உள்ளவர்களாக அங்கீகரிக்காதபடியால் சிறிலங்காவும் அவர்களை அங்கீகரிக்கவில்லை என்று அவரது அல்ஜசீராவுக்கான செவ்வியில் கூற வைத்தது. இந்நிலையில் ஈழத்தமிழர்களின் மேலான உலக வெறுப்புகளுக்கு எதிரான நாள் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையால் கட்டமைக்கப்பட உலகத் தமிழர்கள் உழைக்க வேண்டும் அதுவே ஈழத்தமிழர்களின் தன்னாட்சிக்கான அனைத்துலக நாடுகளின் ஆதரவைப் பெற்றுத் தரும் என்று இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

இந்நேரத்தில் சிறிலங்காவின் 2025ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல், 1972இல் ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்குவதை நோக்காகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தல் போல, இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்வதால் தன்னாட்சி உரிமை உள்ளவர்களாய் வாழ்ந்து வரும் ஈழத்தமிழரின் இருப்பையும் அவர்களின் தனித்துவமான தேசிய வாழ்வியலால் கட்டமைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர் நாகரீகத்தையும் இல்லாதொழிக்கும் வகையில் அவர்களை வடக்கினர் கிழக்கினர் என மீள்வரைவு செய்யும் பண்பாட்டு இனஅழிப்பு நோக்குடைய தேர்தலாக முன்னெடுக்கப்படுகிறது என்பதை இலக்கு தாயகத்திலும் அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்களுக்கு கவனப்படுத்த விரும்புகிறது. ஈழத்தமிழரின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் அவர்களின் வரலாற்றுத் தாயகம் என்ற இருப்பை நிராகரித்து வடக்கு கிழக்கு வாழ் சமுகத்தவர் என்ற ரணில் அரசாங்கத்தின் புதிய வரைவிலக்கணத்துக்கு ஏற்ப வடக்கு பொருளாதாரம் கிழக்கு பொருளாதாரம் எனப் பேசும் அநுர ஈழத்தமிழர்கள் இதனை ஏற்கவைக்கும் குடியொப்பமாகவே உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் தனது தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார். இதனால்தான் கட்சி வேறுபாடுகளைக் கடந்து இதனை எதிர்ப்பதற்கான சட்ட முறைமையின் உறுதிப்பாட்டுக்காக அனைத்து ஈழத்தமிழர் தாயக உள்ளூராட்சி சபைகளிலும் சைக்கிள் சின்னம் வெற்றி பெற உழைக்கும்படி கேட்க வேண்டிய தேவை இலக்குக்கு ஏற்படுகிறது. சென்ற சிறிலங்காவின் அரசத்தலைவர் தேர்தலிலும் இலக்கு இதே அடிப்படையில்தான் சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க இலக்கு வலியுறுத்தியது.

மேலும் பொதுக் கருத்துக்கோளங்கள் (Public Spheres) வழி அரசியலை நிர்ணயிக்கும் சனநாயகமுறை உலக அரசியலில் மாற்றப்பட்டு செல்வாக்குக் கோளங்கள் (Spheres of influence) வழி உலக அரசியலை நிர்ணயிக்கும் புதிய உலக அரசியல் ஒழுங்கை ட்ரம்ப் கடந்து வாரத்து தனது அமெரிக்க காங்கிரசிலான "நாட்டின் நிலை" குறித்த அரச அதிபருரையில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் உலகின் மூத்த குடிகளாகவும் சிறிய தேசஇனமாகவும் உள்ள ஈழத்தமிழர்கள் செல்வாக்குக் கோளங்களுள் தாங்களும் இணையத்தக்க வகையில் ஈழத்தமிழர் தாயகத்தின் மூலவளங்கள் மனிதவலு மூலதனப் பலம் என்பவற்றை உள்ளூராட்சித் தேர்தல் களத்தின் வழி உலகிற்கு வெளிப்படுத்தல் முக்கியமானதாகிறது என்பதை இலக்கு வலியுறுத்த விரும்புகிறது. அதேவேளை இன்றைய உலக புதிய அரசியல் முறைமை உலகின் எத்தகைய தன்மையான அரசுடனும் அதன் இலட்சியத் தன்மையைக் கருதாது ‘முறைசார்பற்ற பொதுக்கருத்திசைவுகள்’ (Informal consensus) மூலம் கூட்டுக்களை உருவாக்குதல் வழி அரசாங்கத்தின் செயற்திறனை (DODGE) உறுதிப்படுத்தல் என்பதை அரசியல் ராஜதந்திரமாக வளர்த்தெடுக்கிறது. இதனை அமெரிக்க ரஸ்ய உக்ரேன் அமைதிப்பேச்சு முயற்சி உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. அமெரிக்கா தனது கூட்டு நாடுகளை விட்டு ரஸ்யாவுடன் சீனாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதும் கனடாவை கிறீன்லாந்தை பனமாவைத் தனதாகவே மாற்ற முயல்வதும் உலக வர்த்தகப் போரை தனது கூட்டு நட்பு நாடுகள் மேலும் தொடுத்திருப்பதும் உறுதிசெய்துள்ளது. இதற்கேற்ப ஈழத்தமிழர்கள் தங்களுக்கான புதிய அரசியலை முன்னெடுப்பதற்கான கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். இதனை தொடங்குவதற்கான முதல்வெற்றியாக ஈழத்தமிழர்களின் தேசியத்தை முன்னெடுக்கும் உள்ளூராட்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதே இலக்கின் கருத்தாக உள்ளது அவ்வாறே இந்தியா 1974 -76 களில் வரையப்பட்ட இலங்கையுடனான கடல் எல்லைகளை தேசப்படத்திலேயே வைத்துவிட்டு இன்று இழுவை மடி மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தும் இந்திய மீனவரால் பாக்கு நீரிணை மற்றும் முல்லைத்தீவு கடற்பகுதிகள் புதுக்கோட்டை நாகபட்டின மீனவர்களின் மீன்பிடித்தளமாகவும் பாக்குகுடா கடல் இராமேஸ்வர மீனவர்களின் மீன்பிடித்தளமாகவும், மன்னார்க்குடா தூத்துக்குடி மீனவர்களின் மீன்பிடித் தளமாகவும், மாற்றி வருகிறது. இது இந்தியா வெளிப்படையாகவே கூறும் சக்தி அரசியல் செயல்தான். இந்நேரத்தில் இந்தியாவுடனும் உரையாடல்களை நடாத்த ஈழத்தமிழ்த் தேசியத்தின் மேல் விருப்புடையவர்களாக உள்ளவர்களின் கூட்டு அமைக்கப்படுவதும் அது உள்ளூராட்சியை வென்று தனக்கு மக்களாணை உண்டெனக் காட்டுவதும் காலத்தின் தேவை என்பதை இலக்கு அழுத்திக் கூற விரும்புகிறது. இறுதியாக கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி அவர்களுக்கு ஈழத்துக்கு வெளியே அதிகளவில் தமிழர்கள் வாழும் நாட்டின் பிரதமர் என்ற வகையில் இலக்கு தனது வாழ்த்தை ஈழத்தமிழர்கள் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**

பகுதி 1



# இலங்கையின் இனப்படுகொலையால் தமிழீழ மண் நனைந்துள்ளது

2009 ஆம் ஆண்டு உச்சக்கட்டமாக இலங்கையில் நீடித்த மோதல், குறிப்பாக பலவந்தமாக காணாமல் போதல் என்ற கொடூரமான நிகழ்வின் மூலம் தமிழ் மக்கள் மீது ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது. மோதலுக்கு முந்தைய மற்றும் இறுதி கட்டங்களில் நடந்த இந்த காணாமல் போதல்கள், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் மோசமான மீறல்களைக் குறிக்கின்றன. இந்த ஆய்வு காணாமல் போதல்களின் வரலாற்றுச் சூழல், தமிழ் ஈழ நிலத்தில் பொதிந்துள்ள சான்றுகள், பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப்பின் வழக்கு, தமிழீழ மாவட்டங்களின் மூலோபாய கையகப்படுத்தல் மற்றும் இந்த கொடூரமான செயல்களில் குறிப்பிட்ட இலங்கை இராணுவ தளபதிகளின் ஈடுபாடு ஆகியவற்றை ஆராய்கிறது.

### வரலாற்றுச் சூழல்: 2009க்கு முந்தைய கட்டாயக் காணாமல் போதல்கள்

2009 ஆம் ஆண்டு மோதல் முடிவுக்கு வருவதற்கு முன்பிருந்தே தமிழ் மக்களுக்கு பலவந்தமாக காணாமல் போதல்கள் ஒரு துயரமான யதார்த்தமாக இருந்து வருகிறது. சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் (ITJP) 2009 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் “மே” க்கு இடையில் மட்டும் சுமார் 169,796 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர், மேலும் பலர் கணக்கில் வராமல் போயுள்ளனர் என்பதை ஆவணப்படுத்தியுள்ளது, இது தமிழ் பொதுமக்களை குறிவைக்குமுகமான இன அழிப்பையே எடுத்துக்காட்டுகிறது.

### தமிழீழத்தின் மண்: மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்தல்

தமிழீழ நிலமே இந்தக் கொடுமைகளுக்கு மௌனமாக சாட்சியமளிக்கிறது. செம்மணி மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் காணாமல் போனவர்களின் கொடூரமான யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள விமானத் தளங்கள் மற்றும் பிற திட்டங்கள் உட்பட இராணுவ நிலைகள் பெரும்பாலும் பொது மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன, அவர்களின் தலைவிதி என்னவென்று தெரியவில்லை. மனிதப் புதை குழிகளின் மேல் அமைக்கப்பட்ட இந்த கட்டமைப் புகள், நீதிவழங்கப்படாத கடந்த காலத்தின் தெளிவான நினைவூட்டல்களாக விளங்குகின்றன.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
சட்டத்துறை இறுதியாண்டு மாணவி
Western Sydney University
Australia

### 2009 ஆம் ஆண்டின் துரதிர்ஷ்டவசமான சரணடைதல்கள்: பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப்பின் வழக்கு



இனப்படுகொலையின் உச்சக்கட்டமாக, மே 2009 இல் இலங்கை இராணுவத்திடம் சரணடைவதன் மூலம் பாதுகாப்பைத் தேடி ஏராளமான தமிழ் பொதுமக்களும், போராளிகளும் சென்றிருந்தனர். அவர்களில் மரியாதைக்குரிய கத்தோலிக்க பாதிரியாரும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் முதல்வருமான பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப்பும் இருந்தார். நூற்றுக் கணக்கானவர்களுடன் சேர்ந்து, அவரது காணாமல் போதல் என்பது இந்தக் காலகட்டத்தில் பலவந்தமாக காணாமல் போனவர்களின் கொடூரமான பிரச்சினையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப்பின் பின்னணி

தந்தை பிரான்சிஸ் ஜோசப் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் புகழ்பெற்ற முன்னாள் மாணவர். தனது திருச்சபை நியமனத்திற் குப் பிறகு, அவர் ஒரு ஆங்கில ஆசிரியராக தனது பழைய பள்ளிக்குத் திரும்பினார், பின்னர் ரெக்டர் (முதல்வர்) பதவிக்கு உயர்ந்தார். சுதந்திர தமிழ் ஈழத்திற்கான அவரது உறுதியான ஆதரவு எல்லோராலும் அறியப்பட்டது.

### மே 18, 2009 நிகழ்வுகள்

மே 18, 2009 அன்று, மோதல் உச்சத்தை எட்டிய போது, காயமடைந்த போராளிகள் மற்றும் இளம் குழந்தைகள் உட்பட குறைந்தது 360 பேர் கொண்ட குழு வை அழைத்துக்கொண்டு பாதிரியார் ஜோப் முல்லைத்தீவில் உள்ள வட்டுவாகல் பாலத்தின் வழியாகச் சென்றார். அவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தனர், தங்கள் உயிர்கள் காப்பாற்றப்படும் என்ற அனுமானத்தின் கீழ் இராணுவ பேருந்துகளில் ஏறினர். துரதிர்ஷ்டவசமாக, பாதிரியார் ஜோசப்பும் அவருடன் சென்றவர்களும் மீண்டும் வரவில்லை, இது இந்தக் காலகட்டத்தில் பலவந்தமாக காணாமல் போனவர்களின் பரந்த பிரச்சினையை எடுத்துக் காட்டுகிறது.

### “வெள்ளைக் கொடி” சம்பவம்



தந்தை ஜோசப் காணாமல் போனது பெரிதும் பேசப்பட்ட “வெள்ளைக் கொடி” சம்பவத்தின் பின்னணியில் நிகழ்ந்ததுள்ளது. மோதலின் இறுதி நாட்களில், தமிழீழ விடுதலைப்புலிகளின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# குட்டித்தேர்தலில் எந்தக்கட்சியும் வடகிழக்கில் தனித்து ஆட்சியமைக்க முடியாது..!

பா.அரியநேத்திரன்

வரும் வாரம் 2025, மார்ச் 17, தொடக்கம், 20 வரை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் சகல மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களால் கையேற்கப்பட்டு 20ம் திகதி தேர்தலுக்கான திகதி உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படவுள்ளது.



பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல் 21க்கும் மே 10க்கும் இடையில் ஒரு திகதியில் தேர்தல் இடம்பெற வாய்புகள் உள்ளன. வடக்கு கிழக்கை பொறுத்தவரை எட்டு மாவட்டங்களில் 04 மாநகரசபைகளும், 10 நகரச சபைகளும், 65 பிரதேச சபைகளுமாக மொத்தமாக 79 சபைகள் உள்ள இதில் தமிழ் உறுப்பினர்களை கொண்டு ஆட்சியமைக்கும் சபைகள் ஏறக்குறைய 65 சபைகள் அடங்கும். இறுதியாக 2018ல் உள்ளூராட்சிசபை தேர்தல கலப்பு முறை அறிமுப்படுத்தப்பட்டு முதலாவது தேர்தல் இடம்பெற்றது அதில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வட்டார ரீதியாக 69 ஆசனங்களும் விகிதாசார ரீதியாக 06 ஆசனங்களுமாக 75 ஆசனங்கள் கிடைத்தன.

திருகோணமலையில் வட்டார ரீதியாக 33 ஆசனங்களும், விகிதாசார ரீதியாக 03 ஆசனங்களுமாக 36 ஆசனங்கள் கிடைத்தன. அம்பாறை மாவட்டத்தில் வட்டாரத்தில் மட்டும் 27 ஆசனங்கள் கிடைத்தன.விகிதாசாரத்தில் கிடைக்கவில்லை. அதேபோல் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டார ரீதியாக 141 ஆசனங்களும், விகிதாசார ரீதியாக 12 ஆசனங்களுமாக 153 ஆசனங்கள் கிடைத்தன. முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டார ரீதியாக 30 ஆசனங்களும் விகிதாச ரீதியாக 02 ஆசனங்களும் 32 ஆசனங்கள் கிடைத்தன. வவுனியாமாவட்டத்தில் வட்டாரத்தில் 31 ஆசனங்களும் விகிதாசாரத்தில் 01 ஆச முமம் 31 ஆசனங்கள் மன்னார் மாவட்டத்தில் வட்டாரத்தில் 25 ஆசனங்களும் விகிதாரத்தில் 03ஆசனங்களும் 28 ஆசனங்கள் கிடைத்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டாரத்தில் 33 ஆசனங்களும் விகிதாசாரத்தில் 01 ஆசனமும் 34 ஆசனங்கள் கிடைத்தன. இதன்படி தமிழ்த்தேசிய கூட்டமைப்பால் கிழக்கு மாகணத்தில் வட்டார ரீதியாக 102 உறுப்பினர்களும், விகிதாசாரத்தில் 08 உறுப்பினர்களுமாக மொத்தம் 110 உறுப்பினர்கள் தெரிவானார்கள். வடமாகாணத்தில் வட்டார ரீதியாக 289 உறுப்பினர்களும் விகிதாசார ரிதியில் 20 உறுப்பினர்களும் தெரிவானார்கள்.

மொத்தமாக வடகிழக்கில் இருந்து வட்டாரத்தில் 389 உறுப்பினர்களும், விகிதாசாரத்தில் இருந்து 28உறுப்பினர்களுமாக மொத்தமாக 417 உறுப்பினர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதி நிதிகளாக பதவியில் இருந்தனர். மொத்தமாக 337,877 வாக்குகள் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு 2018ல் கிடைத்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக இலங்கை தமிழ் அரசுக்கட்சி, ரெலோ, புளட் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து சபைக ளில் வேட்பாளர்களை நிறுத்தி தெரிவு செய்யப்பட்டவர்களே அந்த 417 உறுப்பினர்கள் சுருக்கமாக கூறுவதானால் மூன்று கட்சிகளின் கூட்டுமுயற்சி எனலாம். ஆனால் 2025 தற்போதய உள்ளூராட்சி சபை தேர்தலில் மூன்று கட்சிகளும் இரண்டு கட்சிகளாக மாறி இரண்டு சின்னங்களில் போட்டியிடுகின்றன.

அதைவிட வேறு தமிழ்தேசிய கட்சிகளும் வழமை போன்று போட்டியிடுகின்றன. சுயேட்சை குழுக்களாகவும் போட்டியிடுகின்றன. இதனால் 2018ல் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்த 417 உறுப்பினர்களை எந்த ஒரு தமிழ்த்தேசிய கட்சிகளும் மெறுவதற்கான சந்தர்ப்பம் அரிதாகவே உள்ளது. ஆனால் இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் ஆளும் தரப்பாக தேசிய மக்கள் சக்தியின் அநுர அலை 159 ஆசனங்களை பிடித்து ஆட்சியில் உள்ள நிலையில் வடகிழக்கில் இருந்தும் ஏழு தமிழர்கள் அதே கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகி உள்ளனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்து ஐந்து மாதங்களால் இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் இடம்பெறப்போகின்றது.



இதன் தாக்கம் எந்தளவில் வடகிழக்கில் இடம்பெறும் என்பதை பார்த்தால் தேசிய மக்கள் சக்தி அரசின் பார்வை தென்பகுதிகளை விட வடகிழக்கில் அதிக கவனம் செலுத்தப்படுவதை காணலாம். அதற்கான காரணம் ஏற்கனவே ஜெனிவாவில் ஆளும் தரப்பு வெளிவிவகார அமைச்சர் வடகிழக்கு மக்களும் தம்மை ஆதரித்துள்ளனர் என்பதை கூறி அங்குள்ளவர்களும் சமத்துவமாக வாழ விரும்புகிறார்கள் என்பதை நிருபித்தார். இந்த கூற்றை மேலும் உறுதிப்படுத்த வேண்டிய நோக்கில் வடகிழக்கில் கணிசமான சபைகளை கைப்பற்ற வேண்டும் என்ற கொள்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுவது கண்கூடு. வடக்கு கிழக்கில் 35 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் குறிவைத்து உள்ளூராட்சி சபைகளில் வேட்பாளர்களை நிறுத்தும் முயற்சியில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதனால் கணிசமான வட்டாரங்களில் வெற்றிபெறக்கூடிய வாய்புகள் உண்டு. இதனை உறுதிப்படுத்தும் விதமாகவே மட்டக்களப்பில் தேசிய மக்கள் சக்தியிலால் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு விரைவில் வடகிழக்கு முழுவதும் தேசிய மக்கள் சக்தி கைவசம் வந்துவிடும் என கூறியதை அவதானிக்க முடிகிறது. தமிழ்த்தேசிய கட்சிகளை பொறுத்தவரை ஒற்றுமையாக உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்ள தயாராகவில்லை, தனித்தனியாக ஏறக்குறைய ஐந்தாக பிரிந்துதான் வடகிழக்கில் போட்டியிடவுள்ளனர்.

பிரதான தமிழ்தேசிய கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் சிக்கல் நிலைமை உள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கை என்ற போர்வையில் உண்மையான தமிழ்த்தேசிய வாதிகள் ஓரம் கட்டப்படுகின்றனர். நாடு அநுராவோடு ஊர் எங்களோடு என்ற ஒரு கோஷத்தை அண்மையில் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் கூறியிருந்தார். இதில் இருந்து நாடு என்பது என்ன? ஊர் என்பது என்ன? ஊர்களும் நாட்டில் அல்லவா உள்ளது. அப்படியானால் ஊர்களிலும் திசைகாட்டிக்கு இடம் கிடைக்கும் என்பதுதான் அர்த்தம். ஆனால் யார் போட்டியிட்டாலும் வடகிழக்கில் தனித்து எந்த கட்சியும் ஆட்சியமைக்க வாய்பில்லை தொங்கு நிலை சபைகளாகவே தொடரும் தேர்தல் முடிந்தகையோடு பதவிகளுக்காக கட்சிகளுக்கு இடையே முரண்பாடுகளும் ஏற்படக்கூடும் என்பதே உண்மை.

• • •

## அமைதிப் பேச்சு ... தொடர்ச்சி ...

ளது. ஆபிரிக்க கூட்டமைப்பின்தலைமைப் பொறுப்பில் அங்கோலா தற்போது இருக்கின்ற நிலை யில் அது இந்த அமைதி முயற்சிகளை ஒருங்கிணைத்துள்ளது.

கொங்கோவின் அதிக கனிம வளங்களைக் கொண்டகிழக்குபகுதியில்றுவன்டாவின்ஆதரவு கொண்ட எம்-23 என்ற ஆயுதங்குழுவினருக்கும் அரச படையினருக்குமான மோதல்கள் ஆரம்பமாகியிருந்தது. இந்த மோதல்களின்போது எம்-23 ஆயுதக்குழு பல நகரங்களைக்கைப்பற்றியதுடன், அங்கு 8,500 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக கொங்கோவின் சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

அங்கோவின் மத்தியஸ்த்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களில் இருந்த கடந்த வருடம் கொங்கோ விலகியிருந்தது. எம்-23 ஆயுதக்குழுவை தவிர்த்து றுவண்டா அரசுடன் பேசுவதற்கு அது திட்டமிட்டிருந்தது. ஆனால் அது மிகப்பெரும் மோதல்களுக்கு வழிவகுத்திருந்ததுடன் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

பெல்ஜியத்தின் காலணித்துவத்தின் கீழ் இருந்த கொங்கோவுடன் கனிமவளங்களை அகழ்வது தொடர்பில் அமெரிக்கா உடன்பாடு ஒன்றை மேற்கொள்ள முனைந்திருந்தது. அதற்கு பதிலாக பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கப்படும் என அமெரிக்கா தெரிவிததத்தைத் தொடர்ந்து அங்கு மோதல்கள் தீவிரமடைந்திருந்தன.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பழிவாங்கப்பட்ட இஸ்லாமியர்கள்!

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ‘உயிர்த்த ஞாயிறு’ தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் உள்ள தேவாலயங்கள் மற்றும் கொழும்பில் உள்ள 5 நட்சத்திர விடுதிகள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 300 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிர் பலியெடுக்கப்பட்டதுடன் 500 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகாயப்படுத்தப்பட்ட கொடூர சம்பவம் நடந்து ஐந்து வருடங்களை கடந்துள்ள போதிலும் அது இஸ்லாமிய சமூகம் மீது பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது. ஏனெனில் இச்சம் பவத்திற்க்கு இஸ்லாமிய சமூகம் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இக் குண்டு தாக்குதலால் ஒட்டு மொத்த இஸ்லாமிய சமூகத்தையும் பயங்கரவாதிகளாக சித்தரிக்க முனைந்தனர். பல அப்பாவிகள் அப்பட்டமாக பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். ஆனாலும் தாக்குதலுடன் சம்மந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் ரணில், மைத்திரி ஆட்சியில் இச்சம்பவம் நிகழ்ந்து. அதற்கு பின்னரான கோட்டாபய அரசாங்கம் தற்போதைய அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வரை ஆட்சிக்கு வந்த போதிலும் நீதி நிலை நாட்ட படவில்லை. இது குறித்து முன்னாள் கிண்ணியா நகர சபை உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட அனைத்து பள்ளி வாயல்களின் சம்மேளனத்தின் செயலாளருமான எம்.எம்.மஹ்தி தெரிவிக்கையில், ‘‘உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இலக்கு முஸ்லிம்களை குற்றவாளி கூண்டில் ஏற்றுவதே.



2019.04.21 ஞாயிற்றுக் கிழமை நடாத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலானது திட்டமிட்டு ஒரு அரசியல் இலக்கினை அடைவதற்காக அரங்கேற்றப்பட்ட ஒன்றாகும்.

தாக்குதலின் காரணமாக 270 க்கும் மேற்பட்டோர் மரணித்தது மாத்திரமன்றி 500க்கும் மேற்பட்டோர் பல்வேறு உபாதைகளுக்கும் உள்ளானார்கள். இலங்கையின் வரலாற்றில் தாக்குதலானது மறக்க முடியாததும் மன்னிக்க முடியாததுமாகும்.

தாக்குதலின் காரணமாக உயிர்களை இழந்தவர்களுக்கோ உபாதைகளுக்கு உள்ளானவர்களுக்கோதமது சொத்துக்களைஇழந்தவர்களுக்கோ இதுவரை எந்த ஒரு நீதியோ நியாயமோ இழப்பீடுகளோ வழங்கப்படாமையானது கவலையான விடயமாகும்.



தாக்குதலானது குறிப்பிட்ட ஒரு சிலரால் அரசியல் இலாபங்களை அடைவதற்காக திட்டமிடப் பட்டு கூலிக்கு அமர்த்தப்பட்ட இஸ்லாமிய பெயர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் அரங்கேற்றப்பட்டது என்பது பல்லின சமூகம் வாழுகின்ற இந்நாட்டில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறுபான்மை சமூகமாக வாழுகின்ற கத்தோலிக்க மக்கள் மீது அதே சிறுபான்மை இனமாக வாழுகின்ற இஸ்லாமிய பெயர் தாங்கிகளை கொண்டு நடாத்தப்பட்ட இந்த தாக்குதலை திட்டமிடுவதற்கோ நடாத்துவதற்கோ இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எந்த ஒரு தேவையும் இருக்கவில்லை. முஸ்லிம் சமூகம் அவ்வாறு சிந்திக்கவும் இல்லை.

ஆனாலும் அரசியல் இலாபங்களை அடைவதற்காக திட்டமிட்ட அந்த சூத்திரதாரிகள் இரண்டு சிறுபான்மை சமூகங்களையும் மோத விட்டு அதில் குளிர்காய்வதையே இலக்காக கொண்டிருந்தார்கள்.

அதன் அடிப்படையில் பல்வேறு பாதிப்புகளையும் உயிரிழப்புகளையும் கத்தோலிக்க மக்கள் சந்தித்ததோடு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்ட முஸ்லிம் சமூகமும் பல உயிர்களை இழப்பதற்கும் கோடிக்கணக்கான சொத்துக்களை அழிப்பதற்கும் காரணமாக அமைந்து விட்டது.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களோ முஸ்லிம்கள் மீது கோபம் கொள்ள வில்லை. சந்தேகம் கொள்ளவில்லை. தாக்குதல்களை நடாத்தவில்லை. சொத்துக்களை தீயிட்டு அழிக்கவில்லை. மாறாக பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த காடையர்களே முஸ்லிம்களின் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தினார்கள்.

கிண்ணியான்

முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதும் பள்ளிகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட காடையர்களுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது இந் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுகின்றனவா? என்பதை கேள்வியாக எழுப்புகின்றது.

இவ்வாறான ஒரு தாக்குதலை திட்டமிட்டு நடத்துவதற்கு இஸ்லாமிய சமூகத்திற்கு எந்த ஒரு தேவையும் இருக்கவில்லை. நாட்டின் சட்ட திட்டங்களையும் இறைமையையும் மதித்து நடக்கின்ற முஸ்லிம் சமூகம் வேண்டுமென்று திட்டமிடப்பட்டு இச்சம்பவத்தின் ஊடாக குற்றவாளி கூண்டில் ஏற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பல்வேறு விசாரணை குழுக்கள், ஆணைக்குழுக்கள், காவல் துறை குழுக்கள் புலனாய்வு குழுக்கள் என பல்வேறு விசாரணைகள் நடைபெற்றும் உண்மையான சூத்திரதாரி இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என்பது இந் நாட்டின் இறைமையும் சட்டத்தின் ஆட்சியையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.



இரண்டு சிறுபான்மை சமூகங்களையும் மோத விடுவதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்கின்ற மாயை கருத்தியலை உண்டாக்கி பூதாகரமாக மாற்றி அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்கின்ற திட்டமிடலே இங்கு அரங்கேற்றப்பட்டிருக்கின்றது என்பதை தற்போது அது குறித்து நடைபெறுகின்ற வாதப்பிரதிவாதங்கள் கருத்தாடல்கள் மூலமாக நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் தாக்குதல் மூலம் முஸ்லிம் சமூகத்தை அடிப்படை வாத, பிரிவினைவாத, மதவாத கொள்கை கொண்டவர்கள் எனும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்குவதன் மூலம் அவர்கள் மீது வெறுப்புகளை ஏற்படுத்தி பௌத்த, இந்து, கத்தோலிக்க மக்களிடத்தில் இருந்து தூரமாக்கி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# இலங்கையை தனித்தீவு நாடாக்கிய பிரித்தானிய அரசின் உள்நோக்கம்

**பகுதி 3இன் தொடர்ச்சி பாகம் 10**

மு.திருநாவுக்கரசு



1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் பிரித்தானியர் கைப்பற்றிய போதிலும் அதனை இந்தியாவுடன் இணைக்காது 1802 ஆம் ஆண்டு வரை சென்னையில் இருந்து பரிபாலித்தனர். 1802 ஆம் ஆண்டு பிரான்சுடன் கையெழுத்தான ஏமியன்ஸ் உடன்படிக்கையைத் *(The Treat of Amiens)* தொடர்ந்து இலங்கையைப் பிரித்தானியா தனது முடிக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தியது.

இலங்கையை இந்தியாவுடன் இணைக்காது ஒரு தனித் தீவு நாடாகப் பேணவேண்டும் என்பது பிரித்தானியாவின் பிரதான கடல்சார் கொள்கையாகும். அதற்கு ஏற்ப கூடவே இலங்கையை ஓர் ஒற்றையாட்சி நாடாக வைத்திருக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் கவனமாய் இருந்தனர். 1802 ஆம் ஆண்டிலேயே ஒற்றை ஆட்சிக்குரியஅரசியல்நிர்வாகக்கட்டமைப்புகளை வகுத்துக்கொண்டனர். 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய போது கண்டிப் பிரதானிகளின் வற்புறுத்தலுக்கு அமைய எழுதப்பட்ட கண்டி உடன்படிக்கையில் சிங்கள பௌத்தம் அவர்களது பிரதேச சுயாதிபத்தியம் என்பவற்றை மதிப்பதாகப் பிரித்தானியர்கள் கூறியபோதிலும், 1818 ஆம் ஆண்டுக் கண்டிக் கலகத்தின் பின்பு அதனைக் கைநழுவவிட்டனர். 1833 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்ட கோல்புறூக் - கேமரன் *(Colebrooke -- Cameron)* அரசியல் யாப்பு ஏற்பாட்டின் கீழ் கொழும்பை மையமாகக் கொண்ட தெளிவான ஒற்றையாட்சி நாடாக முழு இலங்கையும் ஒரு கோட்டின் கீழ் கட்டமைக்கப்பட்டது.

முழு இலங்கைத் தீவும் ஒரு குடையின் கீழ் ஆளப்பட வேண்டும் என்கின்ற கொள்கை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பல்வேறு ஆட்சியாளர்களிடமும் இருந்தாலும், அது நடைமுறையில் 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படும் வரை ஆள்புல அர்த்தத்தில் இருக்கவில்லை.1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து மேலும் 1818, 1833 என்ற இரு படிமுறைகளைத் தாண்டி ஒரு குடையின் கீழ், அதாவது கோல்புறூக் கேமரன் அரசியல் யாப்போடு முழு அளவில், முழு இலங்கையும் கொழும்பை மையமாகக் கொண்ட ஒற்றை ஆட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பரந்த இந்துமாகடல் நலனோடும் இந்தியாவை ஆள்வதற்கான இராணுவ முகாமாக இலங்கைத் தீவைக் கையாள்வதற்கான நோக்கத்தோடும் ஒற்றை ஆட்சிமுறையின் கீழான ஒன்றுபட்ட இலங்கையையே அனைத்துக் கடல்சார் பேரரசுகளும் விரும்பின. ஐரோப்பியப் பேரரசுகளான போர்த்துக்கீசர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், மேலும் அமெரிக்கர், சீனர், இந்தியர் எனப் பல பேரரசுகளும் விரும்பிய அதேவேளை நவீன வரலாற்று ஈழத் தமிழருக்குத் தலைமை தாங்கிய பல தமிழ்த் தலைமைகளும் ஒற்றை ஆட்சி முறையின் கீழான ஒன்றுபட்ட இலங்கை அரசையே விரும்பின.

### பிரித்தானிய-இலங்கையில் பிரித்தானிய அரசின் சேவகர்களாக உருவான ஈழத்தமிழர் தலைமைகள்.

நவீன இலங்கையில் ஈழத் தமிழருக்கான முதலாவது தலைமை இராமநாதன் குடும்பத்துடன் ஆரம்பமாகி 100 ஆண்டுகள் நீடித்தன. 1833 ஆம் ஆண்டு ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி ஈழத் தமிழருக்கான முதலாவது தலைவராகச் சட்ட நிரூபண சபைக்கான உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராய் பிரித்தானிய ஆட்சியால் நியமிக் கப்பட்டார். அதைத்தொடர்ந்து முத்துக்குமார சாமியின் வம்ச வழி வந்தவரான சேர்(sir). பொன் இராமநாதன் அப்பதவியில் தொடர்ந்தார். 1930 ஆம் ஆண்டு ராமநாதன் காலமாகும் வரை சுமாராக ஒரு நூற்றாண்டு காலமாய் இராமநாதன் வம்சம் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியது.

பிரித்தானிய எஜமான்களின் விசுவாசம் மிக்க அடிமைச் சேவகங்களாய் விசுவாசம் மிக்க அடிமைச் சேவகனுக்குக் குத்தக்கூடிய ‘Sir’ என்ற அடிமை முத்திரையை நெற்றியில் குத்தியவாறு இந்த வம்சம் தமிழ் மக்களுக்குத் தலைவனாகியது. இந்தியாவில் ‘Sir’ பட்டம் அடிமை முத்திரையாகக் கடும் விமர்சனத்திற்கும் பலரால் நிராகரிக்கப்பட்டும் வந்த காலகட்டத்தில் இராமநாதன் வம்சம் பெருமையாக இந்த அடிமை முத்திரையைத் தலைமேல் ஏற்றிக்கொண்டது.

இலங்கையில் ஆள்பதிகளாக இருந்த பிரவுன்ரிக் *(Brownrigg)* என்பவரின் அந்தரங்கச் செயலாளராய் *(Personal Officer)* பதவி வகித்த குமாரசுவாமிப்பிள்ளை அவரைத் தொடர்ந்து ஆள்பதிகளான பக்கெட் *(Paget)*, பான்ஸ் *(Barnes)* என்போருக்கும் மேற்படி விசுவாசம் மிக்க அதிகாரியாய்ப் பணியாற்றினார். குறிப்பாக, பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப் பட்ட காலத்தில் (1815) ஆள்பதி பிரவுன்ரிக்கு பெரிதும் உறுதுணையாக நின்றவுடன் பிரவுன்ரிக்குக்கும் கண்டி இராச்சியப் பிரதானிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பாத்திரம் வகித்தார். தகைய எஜமானிய விசுவாசமிக்க வகையில் மூன்று ஆள்பதிகளுக்குக் கீழ்ச் சேவகராகப் பணியாற்றியதின் பின்னணியில், ஈழத் தமிழரையும் இலங்கைத் தீவையும் பிரித்தானியரிடம் விற்றுப் பிழைப்பதற்கான பரிசாய் ஈழத் தமிழரின் தலைவராகப் பிரித்தானிய எஜமானால் குமாரசுவாமி நியமிக்கப்பட்டார் என்ற வரலாற்று நடைமுறை உண்மை பெரிதும் கவனத்துக்குரியது.

இந்தவகையில், பிரித்தானியர்கள் விரும்பிய ஒன்றுபட்ட இலங்கை, ஒற்றை ஆட்சி முறை என்பனவற்றைத் தோளில் சுமந்தவராய் குமாரசுவாமிப்பிள்ளையும் கூடவே அவரின் வழிவந்த இராமநாதன் வம்சமும் நவீன வரலாற்றில் ஒரு நூற்றாண்டைக் காவிச் சென்றனர். இராமநாதன் வம்சம் ஒருபுறம், பிரித்தானிய எஜமான்களின் அப்பட்டமான சேவகர்களையும் அதேவேளை கூடவே சிங்கள பௌத்த கனவான்களின் தோழர்களையும் தமிழ் மக்களின் பெயரால் அரசியல் அதிகாரம் பெற்றுக் களவாடினர். இராமநாதன் வம்சம் தமிழுக்கும் சைவத்துக்கும் பணியாற்றியவர்கள் என்று ஒரு பகுதியினர் குறிப்பிடுகின்றனர் ஆயினும், பசுவில் பால் கறக்க மாட்டுக்குப் புல்லு போடுவது போன்றதே அது.

இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்பது ஒன்றுபட்ட இலங்கையில் ஒற்றை ஆட்சி முறை என்ற அரசியல் கட்டமைப்புக்கு ஊடாகவே நவீன வரலாற்றில் பிரித்தானியரால் அவர்களது கடல்சார் காலனிய ஆதிக்க நலன்களின் பொருட்டுக் கட்டமைப்புச் செய்யப்பட்டது. அத்தகைய கட்டமைப்பை உருவாக்குவதில் ஈழத் தமிழரின் பெயரால் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேல் பெரும் பணியாற்றியவர்கள் இராமநாதன் வம்சத்தினர் என்பதையே வரலாற்றன்னை கண்ணீரும் செந்நீரும் சொரியப் பதிந்து வைத்துள்ளாள்.

பிரித்தானிய அரசு சிங்களர் பெரும்பான்மைக்கு சாதகமாக டொனமூர் யாப்பை கொண்டு வந்த போது, தான் விசுவாசமாய் நம்பி இருந்த தனது வெள்ளை எஜமான்கள் தன்னைக் கைவிட்டதையும், தான் தோள்கொடுத்த சிங்களக் கனவான்கள் கால்களால் உதைத்துவிட்டதையும் எண்ணி நொந்துகொண்ட சேர்பொன். இராமநாதன் தமது வம்சத்தின் அரசியல் தோல்வியைத் தனது அந்திமக்காலத்தில் பின்வருமாறு குற்ற ஒப்புதல் வாக்குமூலமாய் பதிவு செய்தார்.

*‘Donoughmore means Tamils no more’.* டொனமோர் வந்தால் தமிழர்கள் இனி இல்லை என்று வருத்தத்தோடு பதிவு செய்தார்.

1956 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரைதமிழ் மக்களுக்குத்தலைமைதாங்கிய ‘தந்தை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அரசியலின் அடிமூலம்

துரைசாமி நடராஜா

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விரைவில் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதனிடையே இம்முறை தேர்தலில் மலையகப் பகுதிகளில் இருந்து அதிகளவு பெண்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்று சிவில் அமைப்புகள் கோஷமெழுப்பி வருகின்றன. பெண்களின் பங்களிப்பானது நாட்டில் ஊழல்களை ஒழிப்பதற்கு வலுச்சேர்ப்பதோடு முன்னேற்றகரமான மாற்றத்துக்கும் உந்துசக்தியாக அமையும் என்றும் மேலும் இவ்வமைப்புகள் வலியுறுத்துகின்றன.



இலங்கையின் உள்ளூராட்சி முறைமை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. உள்ளூர் மட்டத்தில் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், பொதுத்தெருக்கள், மக்கள் நலன்புரி வசதிகள், பொழுதுபோக்கு என்பவற்றை நிர்வகித்து பராமரிப்பதற்காக காலனித்துவ ஆட்சிக்கு முன்னதாகவே இலங்கையில் சுயாதீன உள்ளூராட்சி முறைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. என்றபோதும் கட்டமைப்புக்கு உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே அறிமுகம் செய்யப்பட்டதாக புத்திஜீவிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் பழைய உள்ளூராட்சி நிர்வாகம் 'நகர குத்திக' (Nagara Guttika) என்று அழைக்கப்படும் நகரத் தலைவரால் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடுகின்றது. இதேவேளை கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் இருந்து கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுகளை சான்றாகக் கொண்டு நாடெங்கும் கம்சபாக்கள் (கிராம சபைகள்) ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் அறியக் கூடியதாக உள்ளது. எனவே கிராமசபை முறையானது புராதன உள்ளூராட்சி முறையாக கருதப்படுகிறது. இம்முறையின் கீழ் உள்ளூர் விவகாரங்களான பிணக்கு தீர்த்தல், கலாசார நிகழ்ச்சிகள், குடிநீர் வழங்கல், கழிவகற்றல், சுகாதாரம் பேணல், இயற்கை வள முகாமைத்துவம் போன்ற பல விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இவை கிராம நிர்வாகம் தொடர்பில் ஓரளவு அதிகாரம் கொண்ட கிராமத்தலைவர்களின் கீழ் செயற்பட்டன. அத்தோடு சிறிய குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைக் கையாளவும், தகராறுகளைத் தீர்க்கவும் இவை உரிமை பெற்றிருந்ததாக பெரேரா மற்றும் குணவர்தன போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### வரவு செலவுக்கான அதிகாரம்

1931 ம் ஆண்டில் ஆட்சிமுறைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது உள்ளூராட்சி முறைமையிலும் முக்கிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதற்கு பொறுப்பாக அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். 1945 ம் ஆண்டு 43 ம் இலக்க உள்ளூராட்சி சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. 1946 ம் ஆண்டு உள்ளூராட்சி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. உள்ளூராட்சி அதிகார சபைகளின் சேவை வழங்கும் பரப்பை விஸ்தரித்தல், வழிப்படுத்தல் மற்றும் அதன் சேவைகளை கண்காணித்தல் என்பன திணைக்களத்தின் பிரதான நோக்கங்க ளாக அமைந்தன.

1948 ம் ஆண்டுக்கும் 1980 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு அதிகமான அதிகாரம் வழங்கப்பட்டதுடன், 1977 இல் இச்சபைகளுக் கான வரவு செலவு திட்டத்தினை அனுமதிக்கின்ற அதிகாரமும் உள்ளூராட்சி அதிகார சபையின் தலைவரிடம் வழங்கப்பட்டது. உள்ளூராட்சி அரசாங்கமுறைக் கட்டமைப்பில் நகரசபை மற்றும் மாநகரசபை போன்றன 1930ம் ஆண்டுகளில் இருந்து தொடர்ந்தும் செயற் பாட்டில் இருப்பதுடன்,1987 ம் ஆண்டு புதிதாக பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இது மக்களால் நான்கு வருடத்துக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட, கிராமிய மக்களின் வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்ட ஒரு அமைப்பாகக் காணப்படுகின்றது. இது வீதிப் புனரமைப்பு, புதிதாக பாதைகளை அமைத்தல், வீதிவிளக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பொது சுகாதாரம்,பொது பயன்பாடு (குடிநீர், மின்சாரம், கழிவகற்றல்) ஆகிய பல சேவைகளை வழங்குகின்றது. அத்துடன் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி சேவைகள், கட்டுமான வேலைகள்,தொழில் உற்பத்தி, சமூக அபிவிருத்தி, மகப்பேற்று மற்றும் சிறுவர் நல சேவைகள் ஆகிய மேலும் பல பணிகளையும் மேற்கொள்ளுகின்றன.




மலையக பெருந்தோட்டத்துறைக்கு உள்ளூராட்சி அமைப்புக்களின் சேவைகளை விஸ்தரித்தல் முழுமையாக இடம் பெறாமையானது முக்கிய குறைபாடாக முன்வைக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை சட்ட ரீதியாக பெருந்தோட்ட மக்கள் அனுபவிக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். எனினும் அண்மைக்காலத்தில் இதில் சில முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டதையும் இங்கு கூறியாதல் வேண்டும்.

இது ஒரு புறமிருக்க தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதில் இடர்பாடுகள் காணப்படுவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்களும் அவர்களைச் சார்ந்துள்ள அரசியல் அமைப்புக்களும் தொழிற்சங்க மயப்படுத்தப்பட்டவையாக காணப்படுகின்றன. எனவே பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்கள் தங்களைச் சார்ந்துள்ள தொழிற்சங்கங்களின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பிரதேச சபைகளின் வளங்களையும் அதிகாரங்களையும் பயன்படுத்துவதாக கண்டனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க**

இதன் விளைவாக பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், உள்ளூராட்சி சபைகளில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மையை சரிசெய்து அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்கும் ஏற்றவாறு உறுப்பினர்கள் செயற்படுவதில்லை. இவற்றோடு தொழிற்சங்க பேதங்கள் காரணமாக கூட்டுப் பொறுப்பு மற்றும் கூட்டு முயற்சி என்பனவும் இப்பிரதிநிதிகளிடையே இல்லாது போயுள்ளது.



இந்நிலையில்காலாவதியாகியுள்ளஉள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடாத்துமாறு தொடர்ச்சியாகவே கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. எனினும் இழுபறி நிலைமைகளே இவ்விடயத்தில் தொடர்ந்த வண்ணமாக இருந்தது. இதனிடையே சமகால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடாத்தும் முயற்சியில் களமிறங்கி இருக்கின்றது. தேர்தல் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். எவ்வாறெனினும் தேர்தல் தினம் குறித்த அறிவிப்பு எதிர்வரும் 20 ம் திகதி உத்தியோகபூர்வமாக வெளியாகும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க இவ்வறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2025 ம் ஆண்டு 01 ம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன. இதற்கு அமைவாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களின் கட்டுப்பணம் வைப்பில் இடப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 17 ம் திகதி திங்கட்கிழமை முதல் 20 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான அறிவிப்புக்கள் மற்றும் ஆலோசனைகள் சகல தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளன.

336 பிரதேச சபைகளுக்கு தொகுதி அடிப்படையில் 4872 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இம்முறை தேர்தல் நடத்தப்படுகின்றது. 2024 ம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பின் பிரகாரம் 1 கோடியே 71 இலட்சத்து 40,354 பேர் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# மத்திய கிழக்கு நாடுகளில் அதிக கவனம் செலுத்தும் ரஷ்யா

## ரஷ்ய ஊடகவியலாளருடனான செவ்வி

தமிழில்: ஜெயந்திரன்

இறுதிப்பகுதி

**சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னான காலத்தில் மட்டுமன்றி, உலக அரங்கில் அது தொடர்ந்தும் முன்னணி வகிக்கின்றபடியால், இன்றும், ரஷ்யா உலகளாவிய ரீதியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் நாடு என்று நாம் சொல்ல முடியுமா?**

இராஜீக வழிகளிலும், பொருண்மிய வழிகளிலும், உலகின் பல பிரதேசங்களில் தனது உறவுகளை ரஷ்யா பலப்படுத்தி வருகின்ற காரணத்தினால், சோவியத்துக்குப் பின்னான உலகில் மட்டும் ரஷ்யா செயற்படுகிறது என்று சொல்வது பொருத்தமானதாக இருக்காது. மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியா, சீனா, இந்தியா போன்ற பிரதேசங்களில், மொஸ்கோ தனது அதிகாரத்தையும், பிரசன்னத்தையும் விரிவுபடுத்தி வருவது பற்றி ஏற்கனவே நாம் உரையாடியிருக்கின்றோம். நீங்கள் குறிப்பிட்டது போல், ஆயுதரீதியாகப் பார்க்கும் போது, ரஷ்யாவின் பிரசன்னம் குறைந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் இராஜீக வழிமுறைகளில் பார்க்கும் போது, அதன் பங்கு அதிகமாகியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.



ஐக்கிய நாடுகள், பிறிக்ஸ் (BRICS), மற்றும் ஸ்கோ (SKO) ஆகிய அமைப்புகளில் நிரந்தர உறுப்பினராக இருந்துகொண்டு ரஷ்யா தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது.

வடகொரியா, வியட்நாம், பேஜிங், மின்ஸ்க், ராஷ்கென்ற் போன்ற இடங்களுக்கு புட்டின் அண்மையில் உத்தியோகபூர்வமான பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

தென் ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தலைவர்கள் பலர் ரஷ்யாவுக்கு விரைவில் தாம் செல்லவிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

ரஷ்யாவைப் பொறுத்தவரையில், ரஷ்யாவின் காஸான் (Kazan) நகரில் அடுத்த இலையுதிர்காலத்தில் பிறிக்ஸ் மாநாட்டை நடத்த முடிவுசெய்துள்ளமை முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். இந்த மாநாட்டைப் பொறுத்தவரையில் பிறிக்ஸ் அமைப்பில் நிரந்தர உறுப்பினர்கள் மட்டுமன்றி, தென் பூகோளத்தைச் சேர்ந்த பல தலைவர்களும் அழைக்கப்படவிருக்கிறார்கள். வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாகத் தான் முன்னெடுக்கும் பல்வேறு செயற்பாடுகள் மூலம், உலக அரங்கில் ரஷ்யாவைத் தனி



மைப்படுத்த எடுக்கப்படும் எந்த முயற்சியும் வெற்றியடையப் போவதில்லை என்ற செய்தியை புட்டின் வெளிப்படுத்துகிறார்.

மொஸ்கோ இன்று முன்னெடுக்கும் பல்துருவக் கொள்கைக்கு உலகின் பல பாகங்களில் இருந்தும் உறுதியான ஆதரவு கிடைத்துவருகிறது. அதன் அதிகாரமும், செல்வாக்கும் தொடர்ந்து அதிகரித்து வருவதையே காணக்கூடியதாகவிருக்கிறது.

**"மத்திய கிழக்கு நாடுகளுடனும், வட ஆபிரிக்க நாடுகளுடனும் கூட்டாக இயங்குவது, ரஷ்யாவின் பொருண்மியக் கொள்கையின் முக்கிய அம்சமாகும்" என்று ரஷ்ய பொருண்மிய அபிவிருத்தி அமைச்சர், மக்ஸிம் றெச்செற்நிக்கோவ் தெரிவித்திருக்கிறார். உலக அரங்கில், இந்த நாடுகள் வகிக்கும் பங்கு, கணிசமான முறையில் அதிகரித்து வருகின்றது. இந்த நாடுகள் அனைத்தும் தமக்கென ஒரு சுதந்திரமான வெளிநாட்டுக்கொள்கையைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, ரஷ்யாவைப் பொறுத்தவரையில் இந்த நாடுகள் நம்பிக்கைக்குரிய பங்காளிகளாக இருந்துவருகின்றன என்று கோடிட்டுக்காட்டிய அமைச்சர், இணைந்த திட்டங்கள் மற்றும் பிரதேச ரீதியிலான பொருண்மிய கூட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். இவ்விடயம் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன? மத்திய கிழக்கைப் பொறுத்தவரையில், எவ்வாறான துறைகளில் ரஷ்யா இந்த நாடுகளுடன் இணைந்து முதலீடுகளைச் செய்யவும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

மத்திய கிழக்கைப் பொறுத்தவரையில் அங்கு பல மாற்றங்கள் தற்போது நிகழ்ந்து வருகின்றன. பொருண்மியம், சமூக வாழ்வு, அரசியல் உறவு போன்ற விடயங்களில் பல புதிய அணுகுமுறைகளைத் தற்போது அங்கு காண முடிகிறது. எதிர்காலத்தில் உலகளாவிய வகையில், சக்தித் துறையில் தனக்கு முக்கிய பங்கு இருக்கிறது என்று மத்திய கிழக்கு நம்புகிறது.

இன்று, பொருண்மியத்தைப் பொறுத்தவரையில், சவூதி அரேபியா முன்னணி வகிக்கும் ஒரு நாடாகத் திகழ்கிறது. தமது நிதித்துறையை மேலும் விருத்திசெய்ய சவூதி அரேபிய இராச்சியம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தை (UAE) எடுத்துக் கொண்டால், உலகளாவிய நிதிமையமாக மாறும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. ஐக்கிய அரபு அமீரகத்தின் நிதிமையமாக டுபாய் திகழ்கிறது. நியூயோர்க், இலண்டன், சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகியவற்றின் வரிசையில், தாமும் இடம் பிடிப்போம் என்று அது கங்கணம் கட்டிநிற்கிறது. 2023ம் ஆண்டில், ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபரும், பிரதம மந்திரியும், அமைச்சரும் அதே வேளையில், டுபாயின் ஆட்சி அதிகாரத்தையும் கொண்டிருக்கும் முஹமட் பின் றாஷிட் அல் மக்ரூம், 2033ம் ஆண்டளவில் உலகின் நான்கு முன்னணி நிதிமையங்களில் ஒன்றாக, டுபாய் நகரத்தையும் மாற்றுவதற்கான திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். தளம்பலற்ற உறுதித்தன்மை, நிலையான வட்டி வீதங்கள், உயர்வான மதிப்பு, இரகசியம் காக்கும் ஆற்றல் போன்ற விடயங்கள் ஐக்கிய அரபு அமீரகத்தின் பலமான பக்கங்களாக தற்போது கருதப்படுகின்றன.



சென் பீற்றர்ஸ்பேர்க்கில் (St.Petersburg) நடைபெற்ற பன்னாட்டு பொருண்மிய மையத்தின் மாநாட்டில், ரஷ்யாவுக்கும் எகிப்துக்கும் இடையே பொருண்மிய ரீதியான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. நாடுகளுக்கிடையேயான சுதந்திர வர்த்தகம் தொடர்பான ஒரு உடன் பாடு ஒப்பமிடுவதற்கான ஆயத்தங்கள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. 'சுயஸ் கால்வாய் பொருண்மிய வலயத்தை' உருவாக்குவதற்கான முயற்சிகள் இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கின்றன.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

**அரசியலின்... தொடர்ச்சி ...**

பெற்றுள்ளனர். புதிய ஊழல் ஒழிப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக போட்டியிட உத்தேசித்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் வேட்பு மனு பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது தமது சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். 2023 ம் ஆண்டு 3 ம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் வேட்புமனு நிறைவடைந்து ஓரிரு நாட்களில் தேர்தல் பிரச்சார செலவு குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பார்.

### பெண்களின் பிரதிநிதித்துவம்

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுத் தாக்கலின்போது பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு மற்றும் இளைஞர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. குறிப்பாக மலையகப் பெண்கள் சகல துறைகளிலும் பின்தங்கிய ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றனர். அரசியல் ரீதியான பின்னடைவும் இதில் குறிப்பிடத்தக்கதாகும். நீண்ட காலமாக பாராளுமன்றத்தில் மலையக பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்தது. இக்குறையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றுள்ள நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த கலைச்செல்வி மற்றும் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பிகா ஆகிய பெண் பிரதிநிதிகள் நீக்கி வைத்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து மேலும் பல மலையகப் பெண்கள் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் உள் நுழைவார்கள் என்ற நம்பிக்கைக் கீற்றும் இப்போது தென்படுகின்றது.

இலங்கையில் மாகாண சபை முறையானது 1987 ம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக மாகாண சபை முறை அமையும் என்று கருதப் பட்ட போதும் இதன் சாதக விளைவுகள் உரியவாறு கிடைக்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். இதனிடையே மாகாண சபையிலும் கூட மலையக பெண்களின் பிரதிநிதித்துவம் இடம்பெறாத நிலையில் சரஸ்வதி, அனுஷியா சிவராஜா போன்ற ஓரிரு பெண் முகங்களையே அவதானிக்க முடிந்தது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களில் மலையகப் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஓரளவு காண முடிந்தது. இதனிடையே இம்முறை தேர்தலில் பெண் பிரதிநிதித்துவம் மென்மேலும் அதிகரிக்க வேண்டும் என்று சிவில் அமைப்புக்களும் புத்திஜீவிகளும் வலியுறுத்தி வருகின்றனர். இதனூடாக பெண்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உரியவாறு துரிதமாக பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று நம்பப்படுகின்றது. மேலும் பெண்களின் அரசியல் பிரவேசம் அதிகரிக்கும்போது அல்லது பெண்கள் தலைமையேற்கும்போது தேசத்தில் சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என்றும் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மலையகப் பகுதிகளில் அதிகமான சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கி இருந்தன. இதன் காரணமாக நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை போன்ற பல இடங்களில் வாக்குச் சிதறல்கள் இடம்பெற்றிருந்த நிலையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பறிபோவதற்கும் இது உந்துசக்தியானது. இந்நிலைமை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் இடம்பெறக்கூடிய அபாயகரமான நிலைமை மேலெழுந்துள்ளது. மலையக பகுதிகளில் அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் இம்முறை களமிறங்கியுள்ளதாக தெரியவருகின்றது. இது எமது மக்களின் பிரதிநிதித்துவ பாதிப்பிற்கு வழிசமைப்பதாக அமையும் என்று ஆரூடம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. எனவே இது தொடர்பிலும் மிகவும் அவதானமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதோடு சமூகத்துக்கு சிறப்பான சேவையாற்றக் கூடியவர்களை பொது மக்கள் தேர்தலில் தெரிவு செய்து அரசியல் களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### மீள் எல்லை நிர்ணயம்

இந்நிலையில் மலையகப் பகுதிகளில் எல்லை நிர்ணயத்தை புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தி இருக்கின்றார். 'சுதந்திரத்துக்குப் பின்னரான 1948 முதல் 1977 ம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயத்தில் மலையகத் தமிழர்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதுவே இன்றைய பிரச்சினைகள் பலவற்றுக்கும் முக்கிய காரணியாகவுள்ளது. ஆகவே எல்லை நிர்ணயம் திருத்தம் செய்யப்பட வேண்டும். இதற்கான தீர்மானங்களை அரசாங்கம் கொண்டு வர வேண்டும். மலையகத்தைத் தவிர்த்து நாட்டின் ஏனைய பகுதிகளில் 250 முதல் 500 பேருக்கு ஒரு கிராம் சேவகர் பிரிவு காணப்படுகின்றது. ஆனால் மலையகப் பகுதிகளில் 8000 பேருக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு காணப்படுகின்றது' என்று ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இதனடிப்படையில் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மலையகத்தில் திருத்தியமைக்கப்படுமிடத்து, தேர்தல்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்களிலும் மலையக மக்களுக்கு சாதக விளைவுகள் ஏற்படும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

தேசிய மக்கள் சக்தி அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் என்பவற்றில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி ஈட்டியிருந்தது. இந்நிலையில் நாட்டு மக்களின், நாட்டின் அபிவிருத்தி கருதி வாக்குறுதிகள் பலவற்றையும் ஆட்சிபீடமேறுவதற்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி வழங்கி இருந்தது. எனினும் தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறியுள்ள நிலையில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பெரிதும் இடர்படுவதாக எதிர்க்கட்சிகள் விசனம் தெரிவித்து வருகின்றன.

அரசாங்கத்தின் மிதமிஞ்சிய பொய் காரணமாக மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் பொய்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு பொருளாதாரக் கொள்கை என்பதொன்று கிடையாது. ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையை அனுர குமார கடுமையாக விமர்சித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வெளியேறுவதாகவும் குறிப்பிட்டார். ஆனால் தற்போது ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளை எவ்வித மாற்றமும் இல்லாமல் அமுல் படுத்துகின்றார். நாணய நிதியத்தில் தஞ்சமடைந்து புகழ் பாடுகின்றார் என்றும் எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துகின்றன.

எவ்வாறெனினும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் சிந்தித்து,கட்டுக்கோப்புடன் வாக்களித்து தமது பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்ள முற்பட வேண்டும். அரசியல் உரிமை ஏனைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள அடிப்படையாகும் என்பதை மறந்து விடக்கூடாது.

• • •

**அமெரிக்கா... தொடர்ச்சி ...**

நடைமுறைக்கு வரும்போது இந்த எதிர்வுகூறல் மேலும் அதிகரிக்கலாம் என வங்கியின் பிரதம பொருளியல் நிபுணர் புறூஸ் கஸ்மான் கடந்த புதன்கிழமை(12) சிங்கப்பூரில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரம் தான் தற்போது பேசுபொருளாக உள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் அமெரிக்காவின் பொருளாதார வீழச்சி 30 விகிதம் சாத்தியமாக இருந்தது. அது தற்போது40 விகிதமாகஅதிகரித்துள்ளது. ஏப்பிரல் மாதம் வரிகள் நடைமுறைக்கு வரும்போது அது 50 விகிதத்தை விட அதிகரிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரம் இந்த வருடம் 2 விகித வளர்ச்சியை காணலாம் என ஜே.பி மோர்கன் தெரிவித்துள்ள அதேசமயம், அது 1.7 விகித வளர்ச்சியை காணலாம் என கோல்மன் சற்சி என்ற நிறுவனமும், 1.5 விகித வளர்ச்சியை காணலாம் என மேர்கன் ஸ்ரான்லி என்ற நிறுவனமும் தெரிவித்துள்ளன. இந்த வாரம் அமெரிக்காவின் பங்குச்சந்தையில் ஏற்பட்ட வீழச்சியினால் பல நிறுவனங்கள் 1.7 றில்லியன் டொலர்களை இழந்திருந்தன.



## ஆயுத உற்பத்தி... தொடர்ச்சி ...

வீழ்ச்சியை கண்டிருந்தது. சில உற்பத்தி நிலையங்களை அது வரலாற்றில் முதல் தடவையாக மூடியிருந்ததுடன், பணியாளர்களையும் வேலையில் இருந்து நிறுத்தி யிருந்தது.

2023 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் ஜேர்மனின் பொருளாதாரமே அதிகபாதிப்பை சந்தித்திருந்தது. அது 0.3 விகிதமாக சுருங்கியிருந்தது. 2024 ஆம் ஆண்டும் அது முன்னேற்றத்தை காணவில்லை. ரஸ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மலிவான எரிபொருட்களை ஜேர்மன் அரசு தடை செய்த பின்னர் அமெரிக்காவில் இருந்து விலை உயர்ந்த எரிபொருட்களை வாங்கியதால் இந்த நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது உலகபோரின் போதும் இந்தநிறுவனம் வி-1 எனப்படும் குருஸ் ஏவுகணைகளுக்குரிய உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்து ஜேர்மன் அரசுக்கு வழங்கியிருந்தது.

## சம்பூரில் “திசை ... தொடர்ச்சி ...

மத்தியில் எதிர்ப்பு கிடையாது ஆனால் தேசிய மக்கள் சக்தியின் இரட்டை நிலைப்பாடுகளை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கை மின்சாரசபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின்உற்பத்தி கூட்டுத்தாபனம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளன. திட்டத்தின் ஊடாக 130 மெகாவோல்ட் மின் உற்பத்தி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய கூட்டணி ... தொடர்ச்சி ...

‘இதற்கமைய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் துவிச்சக்கர வண்டி சின்னத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும்’ பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

‘அதேநேரம் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை’ என்றும், ‘நல்லிணத்தின் அடிப்படையில் அந்த ஒதுக்கீடுகள் இடம்பெறும்’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வன்னியில் கால் ... தொடர்ச்சி ...

வான கால்நடைகள் காணப்படுகின்ற போதும் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை இல்லாத சிக்கலான நிலைமை காணப்படுகின்றது.

இதனால் கால் நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேயவிடவேண்டிய நிலை காணப்படுவதாக கால்நடைவளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேய்ச்சல்தரவையின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே இந்த சிக்கல் நிலமைகளைக் கருத்தில்கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை நிலங்களை ஒதுக்கிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## நரேந்திர மோடி ... தொடர்ச்சி ...

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போது அவரை சந்தித்து கலந்துரையாடுவதற்கு இலங்கை தமிழரசு கட்சி சந்தர்ப்பம் கோரியுள்ளதாகவும் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இதன்போது மாகாண சபை முறைமை தொடர்பில் கலந்துரையாடப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## இந்தியா ... தொடர்ச்சி ...

குறைப்பதற்கு சம்மதம் தெரிவித் திருந்தது.

இந்தியாவின் வரி அறவீட்டை தான் வெளியில் கொண்டுவந்ததால் தான் இந்தியா தற்போது தனது வரியை குறைத்துள்ளதாக ட்ரம்ப் இந்த வாரம் தெரிவித்திருந்தார். இதனிடையே இந்தியாவின் வர்த்தகத்துறை அமைச்சர் பியாஸ் கோயல் வரி உயர்வு தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்வதற்காக அண்மையில் அமெரிக்காவுக்கு சென்றிருந்தார்.

அமெரிக்காவின் வரி உயர்வை தடுப்பதற்கான பேச்சுக்களில் தான் ஈடுபட்டதாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை 500 பில்லியன் டொலர்களாக எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு உயர்த்த உள்ளதாக இரு நாட்டு தலைவர்களும் கடந்த மாதம் தெரிவித்திருந்தனர். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின் போது இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அமெரிக்க அதிபர் இதனை தெரிவித்திருந்தார். 2023-2024 ஆம் ஆண்டுக்கான இரு தரப்பு வர்த்தகம் 120 பில்லியன் டொலர்களாகும்.

## மத்திய கிழக்கு... தொடர்ச்சி ...

சக்தித்துறையைப் பொறுத்தவரையில், தாம் மற்ற நாடுகளில் தங்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்துகொண்ட வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரையில், அவை தமது உற்பத்தித் துறையை மேம்படுத்துவது தொடர்பாகத் தற்போது கவனம் செலுத்திருவருகின்றன. உற்பத்திகளை உள்நாட்டில் செய்வதை அந்த நாடுகள் ஊக்குவித்துவருகின்றன. உற்பத்தி செய்தல் அல்லது உதிரிப்பாகங்களைக்கொண்டு ஒரு உபரணத்தை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஓமான், கட்டார், பாறெய்ன் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், வரிச்சலுகைகள் வழங்கப்படவிருக்கின்றன. இந்த நோக்கத்துக்காகச் சுதந்திரப் பொருண்மிய வலயங்கள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. உணவுப் பாதுகாப்பு, விண்வெளித் தொழில்நுட்பம், மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் ரஷ்ய நிறுவனங்கள் இந்த நாடுகளுக்கு உதவக் காத்திருக்கின்றன.

இவ்வாறான தேவைகளுக்கு பணத்தை எவ்வாறு செலுத்துவது என்பதே தற்போது சவாலான விடயமாக இருக்கிறது. ஆனால் இப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை அனைத்தையும் ஒப்புநோக்கிப் பார்க்கும் போது, மத்திய கிழக்கில் ரஷ்ய முதலீடுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்குமான வாய்ப்புகள் மிகவும் அதிகமாக இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

நன்றி: wgi.world

K&K Stationers & Printers Ltd
Suppliers of Stationery, Art, Craft and Computer Printer Accessories



92-94 Mitcham Road London SW17 9NG
Tel: 020 8767 5149, 020 8767 2398 Fax: 020 8767 3210
e-mail: pirapu@kandkstationers.com
http://www.kandkstationers.com



## இலங்கையின்... தொடர்ச்சி ...

அரசியல் பிரிவுத் தலைவர் பாலசி ங்கம் நடேசன் மற்றும் சமாதானச் செயலகத் தலைவர் சீவரட்ணம் புலிதேவன் உட்பட பல மூத்த விடுதலைப்புலித் தலைவர்கள் சரணடைய முயன்றனர். அவர்கள் சர்வதேச அனுசரணையாளர்கள் மூலம் தங்கள் நோக்கங்களைத் தெரிவித்தனர், மேலும் இலங்கை அதிகாரிகளால் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த உத்தரவாதங்கள் இருந்தபோதிலும், சரணடைதலின் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற அடையாளமான வெள்ளைக் கொடிகளை அசைத்து அவர்கள் முன்னேறியபோது, அவர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### சர்வதேச எதிர்வினை மற்றும் குற்றச்சாட்டுகள்

இந்த சம்பவ ங்கள் குறிப்பிடத்தக்க சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன. நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்களும், அதைத் தொடர்ந்து வந்த விசாரணைகளும், சரணடைந்த நபர்களை உடனடியாக படுகொலை செய்யும் உத்தரவுகள் உயர் அதிகாரிகளிடமிருந்து வந்திருக்கலாம் என்று கூறுகின்றன. உதாரணமாக, இலங்கை இராணுவத்தின் அப்போதைய தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ, சரணடைந்த அனைத்து விடுதலைப் புலித் தலைவர்களையும் ஒழிக்க 58வது பிரிவின் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்கு உத்தரவிட்டதாகக் கூறப்படுகின்றது.

மேலும், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் பிரபாகரன் சரணடைந்த பிறகு, நீதிக்குப் புறம்பாகக் கொல்லப்பட்டது, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை கடுமையாக மீறியதற்கான சான்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புகைப் படங்கள் மற்றும் நேரில் கண்ட சாட்சியங்கள், சிறுவன் கொல்லப்படுவதற்கு முன்பு இராணுவக் காவலில் இருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

### தொடர் தாக்கங்கள்

தந்தை பிரான்சிஸ் ஜோசப் போன்ற தனிநபர்களின் பலவந்த காணாமல் போதல்கள் இன்றுவரை தீர்க்கப்படாமல் உள்ளன, இது பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் நீண்டகால வேதனைக்கு வழிவகுக்கின்றது. இலங்கை இனப் படுகொலையின் இறுதிக் கட்டங்களில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவான விசாரணைகள் தேவை என்பதை எடுத்துக்காட்டும் பல்வேறு சர்வதேச அறிக்கைகளிலும் பொறுப்புக் கூறலுக்கான அழைப்புகளிலும் இந்த நிகழ்வுகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

சுருக்கமாக, பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப் காணாமல் போனதும் “வெள்ளைக் கொடி” சம்பவத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளும் இலங்கையில் நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதற்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற மோசமான சம்பவங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

### மாவட்டங்கள்:

### மணல் ஆறு (வெலி ஓயா) பிராந்தியம்

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கிய வரலாற்று ரீதியாக மணல் ஆறு என்று அழைக்கப்படும் பகுதியில், விவசாயம் மற்றும் மீன்பிடி தமிழ் சமூகங்கள் பெரும்பான்மையாக வசித்து வந்தன. 1980களின் முற்பகுதியில், இந்தப் பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் மக்களின் விகிதாசாரத்தை மாற்றி அமைப்பதற்கான திட்டத்தை இலங்கை அரசு ஆரம்பித்தது. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவின் கீழ் அமைச்சர் லலித் அதுலத்முதலியால் நிர்வகிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் சிங்கள இருப்பை நிறுவுவதன் மூலம் தமிழ் ஈழத்தின் பிராந்திய தொடர்ச்சியை உடைப்பதை நோக்கமாகக் கொண்டது.

குடியேற்றச் நடைவடிக்கையில், தமிழர்களை அவர்களின் தொன்மையான கிராமங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதும் அடங்கும். 1984 நவம்பரில், இலங்கை இராணுவம், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை என்ற போர்வையில், மணல் ஆறு பகுதியில் உள்ள தமிழ் கிராமங்களைத் தாக்கியது. பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் பின்னர் முன்னாள் குற்றவாளிகள் மற்றும் கைதிகள் உட்பட சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு ஒதுக்கப்பட்டன, இது அரசின் காலனித்துவ நிகழ்ச்சி நிரலை மேலும் வலுப்படுத்தியது.

### கொக்கிளாய் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்குத் தொடுவாய், அலம்பில், நாயாறு மற்றும் குமுள முனை போன்ற அண்டை குடியிருப்புகளுடன் சேர்ந்து, கொக்கிளாய் என்ற கடலோர கிராமமும் இதேபோன்ற வன்முறை மற்றும் இடம்பெயர்வை அனுபவித்தது. டிசம்பர் 15, 1984 அன்று, இலங்கை இராணுவம் இந்த கிராமங்கள் மீது ஒருங்கிணைந்த தாக்குதல்களைத் தொடங்கியது, இதன் விளைவாக 31 பெண்கள் மற்றும் 21 குழந்தைகள் உட்பட 131 தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தனர், பின்னர் அவர்களின் நிலங்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்டன. இந்த வன்முறையான கையகப்படுத்தல் தமிழ் சமூகங்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தை சீர்குலைத்தது மட்டுமல்லாமல், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த கடலோரப் பகுதிகளில் சிங்கள ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும் உதவியது.

### திருகோணமலை மாவட்டம்

திருகோணமலை மாவட்டம் 1985 ஆம் ஆண்டு மே மற்றும் செப்டெம்பர் மாதங்களு க்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ் மக்களைக் குறி வைத்த தொடர்ச்சியான படுகொலைகளை கண்டது. இலங்கை இராணுவம் சிங்கள ஊர்காவல் படையினர் மற்றும் சிங்கள காடையர் களுடன் சேர்ந்து, தமிழ் குடியிருப்புகளை அழிப் பதற்கும், நூற்றுக்கணக்கானவர்களை படுகொலை செய்வதற்குமான தாக்குதல் திட்டங்களை தீட்டியது. சிங்களக் குடியேற்றத்தை எளிதாக்க உள்ளூர் தமிழ் மக்களை விரட்டியடிப்பதை இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டது. இந்த வன்முறை காரணமாக 50,000 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தஞ்சடைந்தனர்.

**தொடரும்.....**

## இலங்கையை... தொடர்ச்சி ...

செல்வா’ என்ற மகுடம் தாங்கிய திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது அந்திமக்காலமான 1976 ஆம் ஆண்டு பின்வருமாறு அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தோடு மேற்படி இராமநாதனின் வாக்குமூலம் ஒப்பிடப்படக்கூடியது.

‘இனி தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்’ தமது ஆயுட்கால அரசியற் தலைமைத்துவத் தோல்வியைக் கடவுளை முன்னிறுத்தி, கூடவே கடவுளின் தோள்களில் சுமத்திவிடும் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலமே இதுவாகும்.

இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கு இராமநாதனே வழிகாட்டியாய் அமைந்தார். பிற்காலத்தில் தமது பாரிய அரசியல் தோல்விகளுக்கெல்லாம் ஒப்புதல் வாக்குமூலபாய் ‘சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிவிட்டார்கள்’ என்று திருவாளர்கள்ஆர். சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்ற தலைவர்கள் இதுவரை கூறி உள்ளமையும் மேற்படி கூறப்பட்ட அடிப்படையை ஒத்ததே. தமது இயலாமைகளையும் தோல்விகளையும் தவறுகளையும் குற்றங்களையும் பழியாக எதிரிகளின் தலைகளில் போட்டு அல்லது கடவுளின் தோள்களில் சுமத்தித் தம்மை அப்பாவிகளாக உருவகித்துத் தம்மை விடுதலை செய்துவிடுவது தமிழ்த் தலைவர்களுக்குக் கைவந்த கலையாகும்.

கால் கல்லுடன் மோதிவிட்டது என்ற தன்பக்க உண்மைக்குப் புறம்பாக ‘காலில் கல்லடித்துவிட்டது’ என்று கல்லில் மட்டும் பழிபோடுவது போல பொதுவாக தமிழ்த் தலைவர்கள் தமது பிழை, குற்றம், குறை, தவறு, தோல்வி, வீழ்ச்சி என்பனவற்றைப் பிறர்மீது மட்டுமே ஏற்றித் தமக்குத் தாமே வெள்ளை அடித்துத் தப்பித்துக்கொள்வார்கள். இதுவிடயத்தில் அப்பாவிக் கடவுளையும் முன்னிறுத்திக் குற்றத்தில் கடவுளுக்கும் பங்களித்துத் தம்மைத் தற்காத்துக்கொள்வார்கள்.

தோல்விக்குப் பொறுப்பேற்காத தகைய வரலாற்று வளர்ச்சிப்போக்கும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குச் சேவகம் செய்ய வல்ல ஒன்றாகவே அமைந்தது. ஆதலால், தோல்விக்குப் பொறுப்பேற்காத தமிழ்த் தலைவர்களின் அரசியல் கலாசாரமும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஓர் அம்சம் என்ற பரிமாணத்தையே பெறுகிறது.

இராமநாதன் வம்சம் தமிழ் மக்களின் பெயரால் அரசியல் அதிகாரத்தைப் பெற்று, அவர்கள் நமது வெள்ளை எஜமான்களுக்கும் சிங்களக் கனவான்களுக்கும் செய்த சேவகம்தான் பெரிது என்று வரலாறு சொல்கிறது.

வரலாறு என்பது கிரேக்க மூலச் சொல்லான *‘Historia’* என்பதில் இருந்து *Histories, History* என உருவானது. வரலாறு என்றால் ஒரு கதை அல்ல, நடந்த சம்பவங்களைத் தொகுத்துச் செல்லும் ஒரு தொகுப்புமல்ல. அது நடைமுறை பற்றிய ஒரு விசாரணையின் பாலான தீர்ப்பு.

*‘Historia’* என்ற கிரேக்க மூலச் சொல்லின் பொருள் *‘inquiry’* - விசாரணை. இதன் வரைவிலக்கணம் பின்வருமாறு சொல்லப்படுகிறது: *‘The Greek word historia originally meant inquiry, the act of seeking knowledge, as well as the knowledge that results from inquiry.’*

*‘Historia’* என்ற கிரேக்க மூலப்பதத்தின் பொருள் விசாரணை என்பது. அதாவது அறிவைத் தேடும் செயல், அத்துடன் விசாரணையின் பெறுபேறாய்ப் பெறப்படும் அறிவு.’

நவீன வரலாற்றில் 1930 ஆம் ஆண்டுவரையான இராமநாதன் வம்சத்தின் சுமாராக நூற்றாண்டு கால அரசியல் தலைமைத்துவத்தையும், அதன் பின்னான இற்றைவரையான சுமாராக நூற்றாண்டு காலத் தமிழ் அரசியல் தலைமைத்துவத்தையும் காய்தல் உவத்தலின்றி, விருப்பு வெறுப்புகளைக் கடந்து முற்றிலும் அறிவார்ந்த வகையில் விஞ்ஞான பூர்வமான வரலாற்றாய்வுக்கூடாக எடை போடுவதன் மூலமே கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் முழுமையான பரிமா ணத்தையும் கற்றுணர்ந்து ஈழத் தமிழரின் எதிர் காலத்திற்கான பாதையையும் பயணத்தையும் வகுக்க முடியும்.

• • •

### உயிர்த்த ஞாயிறு... தொடர்ச்சி ...

குற்றவாளிகளாக காட்டுவதன் மூலம் அவர்களுக்கு எதிராக சட்டத்தையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டும் என்கின்ற வெறுப்புணர்வு நாடகத்தின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் மீது பழி தீர்ப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது என்பது மத தலைவர்கள், புலனாய்வாளர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் போன்றோரின் அண்மைய கருத்துகளிலிருந்து நாங்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றன.

ஆனாலும் இச்சம்பவத்தில் முஸ்லிம்கள் சம்பந்தப்படுவதற்கோ அதற்காக திட்டமிடுவதற்கோ அதன் மூலம் ஏதேனும் இலாபங்களை அடைவதற்கோ எந்த ஒரு தேவையையும் இருக்கவில்லை என்பதை கத்தோலிக்க மதத் தலைவர்களும் மக்களும் திடமாக கூறி வந்தனர்.

முஸ்லீம் சமூகத்தை குற்றவாளி கூண்டில் ஏற்றி பழி தீர்க்க வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்தாலும் தாக்குதலுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் எந்தவித தொடர்புகளும் இருக்கவில்லை. அவர் களுக்கு அவ்வாறான எந்த ஒரு தேவையும் இருக்க வில்லை என்பதையும் தற்போது ஈஸ்டர் தாக்குதல் குறித்து நடைபெறுகின்ற கருத்தாடல்கள் தெளி வாக வெளிக் காட்டுகின்றன.

எனவே இவ்வாறான மோசமான சம்பவங்கள் பல்லின சமூகங்கள் வாழ்கின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் எதிர்காலத்தில் நடைபெற கூடாது என்பதனை நாங்கள் உணரக்கூடியதாக இருக்கின்றது’’ என்றார்.

இந்த நிலையில்தான் கடந்த 5 வருடங்களாக இந்த தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களும் தாக்குதல்களைப் பயன்படுத்தி அரசினால் அரசியல் இலாபம் கருதி நடத்தப்பட்ட வேட்டைகளினாலும் இனவாதிகளினால் நடத்தப்பட்ட இன, மத வெறித் தாக்குதல்களினாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களும் நீதிக்காகக் காத்திருக்கின்றனர்.

குறித்த தாக்குதலின் பின்னர் பல வன்முறைச் சம்பவங்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன் காரணமாக 2019 மே 13 ல் குருநாகல் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் பள்ளிவாயல்கள், வியாபார தளங்கள் இன்னும் பல உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதுடன் தீயிட்டு சென்ற சம்பவங்களும் காடையர்களால் அரங்கேற்றப்பட்டன.

இதன் போது கொட்டரமுல்லை பகுதியை சேர்ந்த 45 வயதான இஸ்லாமியர் ஒருவர் புனித நோன்பு காலத்தில் வாயில் அசிட் விடப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறான நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் சுமார் 2289 இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதுடன் இராணுவம் காவல்துறையினரைக் கொண்டு முஸ்லீம் பிரதேசங்கள் சுற்றிவளைக்கப்பட்டு ஒவ்வொரு வீடுகளும் பரிசோதனை செய்யப்பட்டு வித்தியாசமான பார்வையை இச் சமூகம் மீது திணித்தார்கள்.

தாக்குதல் சம்பவம் குறித்து அகில இலங்கை இளைஞர் வாலிப மன்றத்தின் திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் எம்.எம்.எம். முக்தார் தெரிவிக்கையில்,

‘‘ இது ஒரு திட்டமிட்ட ஒரு இனத்தை நோக்கிய சதிவலை. அதாவது இலங்கையில்,தமிழ் மற்றும் சிறுபான்மை இனமாக முஸ்லிம் இருக்கின்றன. இதில் தமிழர்களுக்கு எதிரான கடந்தகால யுத்தம் முடிவு பெற்ற பின், இலக்கு வைக்கப்பட்ட இனம் முஸ்லிம் சமூகம். விஷேடமாக இந்த நிகழ்ச்சி நிரலின் பின்னணியாக அமெரிக்கா,சீனா, இஸ்ரேல் மற்றும் இந்தியா நாட்டின் தலையீடு இருந்ததை குறிப்பிடலாம். அதிலும் 2009ஆண்டு யுத்த வெற்றிக்கு பின்னர் அதிகார மமதை தலைக்கு மேல் வந்த ராஜபக்ஷ குடும்பம் இது ஒரு ஜனநாயக நாடு என்ற ஒன்றை மறந்து இனவாதிகளாக பயிற்றப்பட்ட குழுக்களுடன் கைகோர்த்து முதல் திட்டமிட்ட தாக்குதல் என இதைக் கருத முடியும்.

அதே போன்று இரண்டாவதாக இலங்கை முஸ்லிம் களின் பூர்வீக சான்றுகள் கிரியைகளை இல்லாமல் செய்வதற்கு தௌஹீத் ஜமாத் ஊடுருவல் நடைபெற்றது .

அதனை தொடர்ந்து முஸ்லிம் சார்ந்த கருத்துருக்களுக்கு எதிராக தாக்குதல் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் உரிமை சார்ந்த விடயங்கள் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இறுக்கமாக்கப்படுவதுடன் சிங்கள சமூகத்திற்கு முரணான கருத்துக்கள் ஊடகத்தின் ஊடாக தரப்படுகின்றது. இதனை வலுவூட்ட இறுதியாக பயன்படுத்திய சிறந்த இனவாத ஆயுதமே உயிர்த் ஞாயிறு தாக்குதல். இது ஒட்டுமொத்த இனவாதிகளுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இருந்த போதிலும் அவர்கள் இன்னும் அதனை அதிகார பூர்வமாக வைத்துக் கொள்ளவே பல கைதுகளை செய்தனர்.

எனவே இது எனது பார்வையில் திட்டமிடப்பட்ட ஒரு இனவாத ஒப்பந்தமாகவே அவதானிக்க அல்லது கருத முடிகின்றது’’ என தெரிவித்திருந்தார்.

குறித்த தாக்குதலுக்குப் பிறகு நீதியற்ற முறையில் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக ஏராளமான முஸ்லிம்கள் தடுத்து வைக்கப்பட்டனர். தாக்குதல்களுக்குக் காரணமான முஸ்லிம்கள் பற்றிய கடுமையான விமர்சனங்களையும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடனான ஒருமைப்பாட்டின் வெளிப்பாட்டையும் கொண்ட கவிதைகளையும் எழுதிய ஆசிரியரும் இளம் முஸ்லிம் கவிஞருமான அஹ்னப் ஜஸீம் இவ்வாறான தேசிய மற்றும் சர்வதேச கவனத்தை ஈர்த்த நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்தவர்களில் ஒருவராவார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் பகிரங்கமாக கண்டித்தவரும் முஸ்லிம் வழக்கறிஞரும், செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றுமொருவராவார் இவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். இது போன்று முஸ்லீம்களில் பல இஸ்லாமிய அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களும் அடைக்கப்பட்டதுடன் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் கூட இந்த குற்றச்சாட்டில் பொய்யான வழக்குகளை இட்டு கைது செய்யப்பட்டார்.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் புதியவை அல்ல. அவை 2013 முதலே நடைபெற்று வருகின்றன. 2013 இல் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல், 2014 இல் பொது பல சேனாவின் பின்னணியில் அரங்கேறிய அளுத்கம வன்முறைகள், 2017 ஏப்ரல் முதல் ஜூன் வரை நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம் வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்த வன்முறைகள், 2017 நவம்பரில் கிந்தோட்டையில் இடம்பெற்ற வன்முறைகள், 2018 மார்ச்சில் இடம்பெற்ற கண்டி, திகன வன்முறைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

ஒட்டுமொத்தமாக இஸ்லாமியர்களின் மீது திணிக்கப்பட்ட ஒரு வன்முறையாக தூண்டப்பட்ட சம்பவமாக இது பார்க்கப்படுகிறது. அப்போதைய கால கட்டத்தில் பெண்கள் முகத்தை மூடுவதற்கு கூட அரசாங்கம் தடை விதித்தது. இதனால் மத சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது

பெரும்பாலாக ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், முஸ்லிம்கள் குற்றவாளிகளாக பார்க்கப்பட்டனர், எனவே சமூகத்தில் அவர்கள் எதிர்ப்பு மற்றும் வன்முறை தாக்குதல்களுக்கு உள்ளாகினர். அரசாங்கத்தினால், முஸ்லிம்களுக்கு எதிராக சட்டங்களை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. இது அவர்கள் மீது கூடுதல் கலவரங்களை உருவாக்கியதுடன் சில முஸ்லிம்கள் பயங்கரவாத குழுக்களுடன் தொடர்பு கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டனர், இது அவர்களின் சமுதாயத்தில் மேலும் அழிவுகளை ஏற்படுத்தியது. இது தவிர தாக்குதலின் பின்னர், முஸ்லிம்கள் அதிக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்பட்டனர், இதன் விளைவாக அவர்களின் சமூக வாழ்க்கை மற்றும் இஸ்லாமிய ஆன்மிக முறைகளில் தடைகள் உருவானது

இந்த தாக்குதலின் காரணமாக, இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு வகையான தனிமைப்படுத்தலையும் அவமானங்களையும் அனுபவித்தனர். ஆனாலும் அப்போது ஐந்து பேர் கொண்ட ஆணைக்குழுவை உருவாக்கிய போதும் அறிக்கைகளில் திருப்தியில்லாமல் அப்படியே தொடர்ந்தும் முஸ்லீம் சமூகம் பழிவாங்கப்பட்டது

இதன் மூலமாக, இலங்கையில் முஸ்லிம்களுக்கு, குறிப்பாக சமூக மற்றும் அரசியல் ரீதியான அழுத்தங்கள் அதிகரித்து, அவர்கள் தங்களது அடிப்படை மனித உரிமைகளைக் கடந்து ஒரு பரபரப்பான சூழ்நிலையில் விழுந்தனர்.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







